# மலர்ந்த ஜீவியம்

ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்

**அக்டோபர் 2005 ஜீவியம் 11 மலர் 6**

## இம்மாத மலரில்..........

பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| *இம்மாதச் செய்தி* | 2 |
| *அன்பர் கடிதம்* | 3 |
| *லைப் டிவைன்* | 4 |
| *எங்கள் குடும்பம்* II | 15 |
| *யோக வாழ்க்கை விளக்கம்* V | 48 |
| *ஜீவியாஞ்சலி* | 52 |
| *அன்னை ஒரு குழந்தை* | 53 |
| *சாவித்ரி* | 61 |
| ***What Do We Mean By Taking To The Spirit?*** | 63 |


❀❀❀

கதை, கட்டுரைகளில் வரும் பெயர்கள்
யாரையும் குறிப்பிடுவன அல்ல.

வருடச் சந்தா ரூ.60/-

### ஜீவியத்தின் ஓசை

✡ **சொல்லில் மலராதது செயலில் பலிக்கும்.**

✡ **A call that fills the Being is a real call.**

✡ **மனிதனுக்கடங்காமல் Motherக்கு அடங்க முடியாது.**

✡ **எது பிடிக்கவில்லையோ அதுவே நமக்குப் பொருத்தம்.**

✡ **அடுத்தவர் ஆண்டவனை விட முக்கியம்.**

## இம்மாதச் செய்தி

**சொல்வதற்கு ஒன்றுமில்லை;**

**செய்வதற்கு**

**ஏராளமானவையுண்டு.**



## அன்பர் கடிதம்

**வணக்கம்!**

அன்னையின் மகிமையை என் விஷயத்தில் அருளியதை என்னவென்று சொல்வது! உண்மையில் அளப்பற்கரியாதது!

நான் இரண்டு மாதங்களுக்குமுன்பு (11.10.04) எந்தவிதமான சாட்சியங்களோ, ஆவணங்களோ (i.e. பிராமிசரி நோட்டு, என்னிடமிருந்து ரூபாய் 1¼ லக்ஷம் கொடுக்கப்பட்டவரிடமிருந்து ரசீது போன்றவைகள்) எதுவுமே இல்லாமல் வெறும் வாய்வார்த்தையை நம்பி ஒருவருக்கு என் பெண்ணுக்கு வேலை வாங்கித் தருவதாக அளித்த வாய்மொழி வாக்குறுதியை நம்பி, பணம் கொடுத்து, பிறகு ரூ.40,000.00ஐத் திருப்பித் தர அவர் காலதாமதம் செய்துவந்த விவரத்தை கடிதம்மூலம் தெரிவித்து அன்னையிடம் பிரார்த்திக்கும்படிக் கேட்டுக்கொண்டது தங்களுக்கு நினைவிருக்கலாம்.

இன்று அன்னையின் மகத்தான அருளால் எனக்கு ரூபாய் 40,000.00 கிடைத்துவிட்டது. யானை வாயில் போன கரும்பும், பூனை வாயில் போன எலியும் முழுவதும் இயற்கைக்கு மாறாக வெளிவந்த சம்பவமே நிகழ்ந்ததில்லை. அன்னையின் அருள் அதையும்கூட செய்யும் என்று இன்றுதான் எனக்குப் புரிகிறது.

முற்றிலும் நம்பிக்கையை இழந்த எனக்குப் பணம் வாங்கிய நபருக்கு திருப்பித் தரச்சொல்லி உத்வேகம் கொடுத்தது எந்த மாபெருஞ்சக்தியாக இருக்க முடியும்?

அன்னைக்கு என் பணிவான மனதார நன்றியுடன் கலந்த பிரார்த்தனைக் கடன்களைச் செலுத்துகிறேன்.

❀❀❀

லைப் டிவைன்

கர்மயோகி

# XIII. The Divine Maya

Existence acts and creates. Its conscious being acts and creates from its pure delight. It is the reality that we are. It is the self of all our modes and moods. It is the cause, object and goal of all our doing. It is our becoming. It creates thus. The poet, artist or musician creates. They really develop some potentiality within them. It lies in their unmanifested self. It comes out as a form of manifestation. The thinker, statesman, and mechanist also create similarly. The potential lies hidden in themselves. They bring it out in a shape of something. What emerges is themselves. Even when cast into form, it is still themselves. The Eternal creates the world similarly. All creation is becoming. It is nothing but self-manifestation. In the seed there is the Eternal. Out of the seed it evolves. It is pre-existent in being. It is pre-destined in its will. Its will is to become. It is pre-arranged in the delight of becoming. The resultant organism is in the original plasma. It held it in itself in force of being. It is a secret force. It is a burdened force. It knows itself. Its impulse is irresistible. It is charged with it. The impulse is to manifest itself in form. It is the individual who creates. He develops out of himself. Only he makes a distinction. He sees the force as distinct from himself. The force works in himself. It works in his material. The reality is different. The force is himself. His consciousness is individualised. It becomes his instrument. It is himself. He uses some material. Even that is himself. A form is the result. It



too is himself. We can put it in other words. It is one existence. It is one force. It is one delight of being. It concentrates itself at various points. It says of each, 'This is I'. Its goal is self-formation. It is a variation of play. It is a play of self-force. That is how it works.

What it produces is itself. It can be nothing other than itself. It has a delight of being. It has a force of consciousness too. It develops its own existence. It is working out a play. That play is a rhythm. Within its deepest being is the Delight. It is the Consciousness. It is the Existence. They suggest ideas to it. They give direction. They use all means. The aim is to perfect the delight. It seeks the various forms of delight. It is a delight of consciousness. It is also the delight of its rhythm. It is the delight of the play of force. It seeks to aggrandise these forms of delight. It seeks delight in the form of being. To come into manifestation is a delight. There is consciousness in it. There is power too. It tries to realise them infinitely. A form is intended. It tries to arrive at it. In the form it tries to enlarge its self-existence. It does so by development and manifestation. Its effort is to increase the delight and realise it. Many things come into the world. They seek to be. They seek nothing but this.

A goal is a completeness sought. It is a goal for the individual. The individual is constituted in a whole. The goal is theirs. Such a goal is one of Self-existence. It is a completeness of self-existence. It is a goal of its power and consciousness. It is also that of the delight of being. The individual is concentrated within its limits. It limits its formation. That goal is impossible in the individual. We seek absolute completeness. The individual is the finite. It is alien to the self-conception of the finite. But the infinite consciousness can emerge in the finite. It is the final goal of the individual. He must recover his own truth of himself. It is done by self-knowledge and self-realisation. It is the truth of the Infinite being. It is Infinite in consciousness. It is the Infinite in delight. The individual repossesses it as his own Self. It is his Reality. The finite is only a mask. It is an instrument for various expressions.

The world-play has been realised by Sachchidananda. Space and Time are the vastness of His existence extended. We see the nature

of that play. We have to conceive of a first involution. Next we need to consider self-absorption. The conscious being is absorbed into substance. The substance is dense and divisible infinitely. The finite variation we see demands this assumption. The next stage is emergence. It is the emergence of a living, thinking being. It emerges out of a formal being. It was imprisoned there. It was a self-imprisonment. The final stage is a release. It comes out as a formed thinking being. Thus it freely realises itself. It realises its unity and Infinity. They are at play in the world. So, it recovers its secret personality. It recovers its existence-consciousness-bliss. This is its real eternal secret. It is a triple movement. It is the key to the world-enigma.

Evolution in the universe is modern. It is a phenomenal truth. Vedanta helps us to know all the truth of evolution. It also illumines and justifies it. Vedanta is ancient. It carries an eternal truth. This modern truth is nothing but the old Truth. It says the universe develops itself successively in Time. The moderns study Force and Matter. To them the field is opaque. The Vedantic scriptures carry a Light. It is still preserved. The modern mind can benefit by Vedanta. This is a mental Self-discovery and self-illumination. The old Eastern and the new Western knowledge can fuse now. The world is already turning to that end.

All things are Sachchidananda. We have discovered that. Still, all is not explained. We know the Reality of the universe. But we meet the world as this phenomenon. We do not know how that Reality became this phenomenon. That process remains undiscovered. We have the key of this riddle. It turns in the lock of this creation. We are yet to discover that lock. This is Existence, Conscious-Force, Delight. It does not work directly. Nor is it a magician with sovereign irresponsibility. He builds up works by the mere fiat of a word. We perceive a process. We are aware of a Law.

It is true there is a Law. It reveals as an equilibrium when we analyse it. The play of forces arrives at a balance. There is a determination to fix that play in certain lines. It looks to be an accident of development.



It is a habit of past realised energy. This is an apparent truth. It is secondary too. It can't be final if we go beyond Force. In the plane of Force it is final. That Force is a self-expression of Existence. We can perceive it. There is a self-truth of Existence. It governs. It determines the constant curve. It fixes the destination also. There is a correspondence between these two lines. Consciousness is the nature of Existence. Existence is original. Consciousness is the essence of its Force. This truth must be of the Conscious Being. It must be its self-perception. There is a self-directive knowledge in Consciousness. It is inherent in it. This determination is a line taken by the Force. It must be a power of that knowledge. It enables it to guide its own Force. It will be a logical line. It is from the original self-conception. So, it must be a self-determining power. It must be in the universal consciousness. The infinite existence is self-aware. This is a capacity of it. It can perceive a certain Truth in itself. It has a force of creation. It lies along the line of that Truth. It can direct it thus. That presides over cosmic creation.

We know of the infinite Consciousness. We also know the result. This result is the workings of that Consciousness. Now we are trying to discover something in between. Is this necessary? This Consciousness is a Self-awareness. Its range is Infinite. It freely creates forms. Afterwards they remain in play. It will continue, if not stopped. The old Semitic Revelation tells us, 'God said, *Let there be Light, and there was Light'*. Here we assume something. We assume a power of Consciousness. Also we assume it can determine light out of everything not light. There is a further assumption. When we say, 'there was light', we assume a directing power. It is an active power. It corresponds to the original power. It is a perceptive power. It brings out the phenomenon. It works out Light. It does so according to the original perception. It prevents Light from being overpowered by other phenomenon. There are infinite possibilities that can overpower any one form. Infinite Consciousness acts. It acts infinitely. Its action is infinite. It produces infinite results. We want a fixed Truth. Or, we need an order of truths. We want to build a fixed world. It should conform to a fixed world. For that there must be a selective faculty. It is a faculty of knowledge. It is

commissioned to shape finite appearance. It must come out of the Infinite Reality.

This power was known to the Vedic seers. They called it Maya. They saw the infinite consciousness as Maya. Maya, to them, comprehended. It contained in itself. It measured out. They understood Maya as a force that forms. Force is delimitation. The infinite existence is an illimitable Truth. It is vast. Out of it Maya shapes. It gives a Name. The Reality is Truth. It is static. Its truth is essential. Maya creates out of it. It creates an active being out of it. Its truth is ordered. It can be put in a philosophical language. In the Supreme Being, all is in all. There is no barrier. Barrier creates separative consciousness. Creation is a play. Existence plays with existence, consciousness with consciousness, force with force, delight with delight. This is the life of the phenomenal being. Maya creates this play. This play is of the all in each. It is also a play of each in all. First it is concealed. The mental play conceals it. We call it the illusion of Maya. Maya gives an illusion. It makes us believe that each is in all. It prevents us from seeing that all is in each. He is in all, Maya pervades, as a separated being. The truth is, he is inseparably one with all existence. This is an error. The Supramental play is the truth. It is the truth of Maya. We have to emerge out of the error and enter into the Supramental truth. There 'each and all' coexist. They are united, inseparable. It is deluding. It is present. We have to embrace it. Then we must overcome it. It is God's play. God plays with division and darkness. He plays with limitation and desire. Strife and suffering too are His playthings. The Force came out of Himself. He subjects Himself to the Force. The Force is obscure. The obscure obscures Himself. He suffers it. Mental Maya conceals the higher Maya. Embrace it and then overpass it. The Force went out from Him in the beginning. God fulfills in the Force illumined. It is for that the Force went out of Him. He emerges out of Force. His emergence is the play of God. Existence has its infinities. Knowledge has its splendours. The Force has its own glories. Love has its ecstasies. They are illimitable. It is for this play God created the universe.



There is a distinction between the higher and lower Maya. It is a thought. It is a link also. It is also a cosmic Fact. The philosophers miss it. The pessimists too miss it. It is an illusionist philosophy. They miss it or neglect it. For them Overmind is Mind. They think Mental Maya created the world. What would the world be so created? It would be a paradox. We can explain it. It would be a nightmare. It would be floating. It would be of conscious existence. It would not be a reality. It won't be even an illusion. It would be fixed. Above is Supermind. It is a creative governing knowledge. Below is the soul imprisoned in works. Mind is in the middle. It is an intermediary. Sachchidananda has a lower movement. The Force is absorbed in it. It is Self-oblivious. His workings have a form. The force is lost in the Form. The Form is her own workings. The Force returns to Himself. It thus emerges out of oblivion. Mind is only one of His instruments. It is an instrument in the descent and in the ascent. It is an instrument of descending creation. Mind is not the secret creatrix. In the ascent, Mind is a transitional stage. For the cosmic existence, there is an origin. It is the source. It is also the consummate term. Mind is not that source or origin.

Some philosophies recognise Mind as the creator of the worlds. They believe in an original principle. Mind is the only mediator between it and the forms. They are of two kinds. One is realistic, the other is idealistic. The first recognises cosmos as the work of Mind, Thoughts, Ideas. The idea can be arbitrary. It may not have any essential relation to Truth. A Truth is of existence. Such Truth may exist. Then it may be an Absolute. It can have no relations. It is irreconcilable with the world. Our world is a world of relations. Idealism sees a Truth behind. It sees an appearance in the front. The appearance is a phenomenon. It comes out of conception. Idealism sees a relation between the Truth behind and the appearance in the front. It is a relationship of opposition. Sri Aurobindo presents a third view. It goes farther in idealism. To it the creative Idea is a Real-Idea. It means it is a power. It is a power of Conscious-Force. It expresses a real being. It is born out of real being. It partakes of its nature. It is not a child of the Void. Nor does it weave a fiction. It is a Conscious Reality. It throws itself into forms. Those

forms change. They are the forms of its own substance. That substance is imperishable. Nor will it change. The world is not a story. It is not a fiction of the Mind or the Universal Mind. It is a conscious birth. That which is beyond Mind is so born. It is a birth into forms. They are forms of itself. The conscious being has a truth. It supports these forms. That truth expresses itself in them. There is a knowledge corresponding to that truth. When expressed, it becomes supramental Truth-Consciousness. It organises real-ideas. It does so in perfect harmony. They are cast into other moulds. They are of the Mind, Vital and Body. These forms are inferior in consciousness. They are a partial expression. Beyond Mind there exists a superior expression. It is the expression of that Truth-Consciousness. These forms evolve variously. They strive to arrive at this goal. The ideal is Beyond, beyond Mind. The ideal is trying to realise itself. It labours so in its own conditions.

There is an ascending point of view. From there we can say the Real is behind all that exists. The ideal is a truth. It is a harmonized truth of itself. There is an intermediate stage. It is the ideal. The ideal throws out a phenomenal reality. It is a variation of the conscious-being. This is drawn to its source. That source is the essential Reality. It tries to recover its original value. It tries to do so entirely. It can be by a violent leap. Or, it can be through the Ideal. This came out of that Ideal. The Mind sees human existence as imperfect. Now we know why it is an imperfect reality. The mental being has an instinctive aspiration. It is towards a perfectibility. It is always beyond itself. There is a harmony in the Ideal. It is concealed. Perfection aims at it. Beyond the ideal there is a supreme surge. It is of the spirit. It swells towards the transcendent. Our consciousness has some facts. It has a constitution. It has a necessity also. Therefore a triple order has come into existence. The Absolute and the relative is an antithesis. It is dual. This triple order negates that duality.

There is an existence in the universe. Mind is incapable of explaining that. We know of the Infinite Consciousness. It has become the universe. For that, first it has to translate itself into infinite faculty of knowledge. It is omniscience from our point of view. But Mind is not a faculty of



knowledge. Mind is also not an instrument of omniscience. Mind is a faculty for seeking knowledge. There are relative thoughts. Certain forms of them can be gained by Mind. Mind can express them towards certain capacities of action. Even when it finds, it does not possess. It cannot keep the Truth itself. It can keep a coin of Truth. It keeps certain funds of such coins. The Mind keeps them in the bank of Memory. It draws upon it according to its needs. Mind does not know. Mind tries to know. It knows as in a glass. It knows darkly. It is a power of interpretation. It can interpret truths of universal existence. To create order we need this power for practical use. It is not the power which knows. It cannot guide existence. Therefore it cannot be the power that created the world. Nor could it have manifested it.

We can suppose an infinite Mind, free of limitations. Can we say it might have created the world? We know what Mind is. We know its mentality. We know the definition of it. This Mind we suppose will be different from it. It would be the supramental Truth. The terms of mentality are fixed. If an infinite Mind is so constituted, well, it can create. It could create infinite chaos. It would create a vast clash of chance, accident. It could create vicissitudes. They could wander towards an indeterminate end. One would aspire towards that end. It would be groping. Such groping would be tentative. A Mind can be infinite, omniscient and omnipotent. It would not be mind at all. It would be supramental knowledge.

Mind is a reflective mirror. It receives images. They are presentations of a Truth or Fact. They are pre-existent. These Facts are external to the Mind. Or they are a vaster Truth. Mind acts from moment to moment. It represents phenomenon. They are either present or came into existence earlier. It possesses another faculty. It is a faculty of construction. It can construct images not known to it. Mind represents what is or what may come into existence. It is incapable of knowing the immediate future. It can do so, if it is a repetition. It has the faculty of forecasting new modifications. This it does out of the meeting of the past and future. The past is a fulfilled possibility. The future is an unfulfilled possibility. In this it succeeds sometimes in some things. Here its success is more or less exact. Others fail to realise. They are

cast into other forms than the Mind expected. It serves other purposes than the Mind planned.

An infinite Mind of this type can construct. The construction may be an accidental cosmos. It would be full of conflicting possibilities. It might take shape into something shifting. It would always be something temporary. Even in the drift it would be uncertain. It may be real or unreal. It can have no definite purpose or end. There would be endless aims. They are really aimless aims. It is so because there is no direction from above. This is realism. Its natural end is Nihilism or nothingness. Or it may end in an illusion, Mayavada. Such a cosmos reflects not itself. It presents what does not exist. It is false presentation. It is a distorted reflection. There all cosmic existence would be an imagination of a Mind. Mind has to struggle to work it out. But it never succeeds. It is so because there is no basis of Self-truth. This construction is the result of past energies. It is overpowered by them. It would be borne onwards forever. There would be no issue as there is no determining factor. In the end it may slay itself. Or, it may fall into eternal stillness. Traced to its roots it is Nihilism and Illusionism. There is an original conception at work in the universe. There is the highest cosmic force. If we suppose our human mentality represents them, then Nihilism is the only wisdom.

We find in the original power of knowledge a higher force. It is higher than the force of our mentality. Now our conception changes. It makes it invalid. It is a partial truth, not the whole truth. It is a law, a law of immediate appearance. It is not a law of the original truth. It does not represent the ultimate fact. Behind the action of Mind, Life and Body there is something. It is not embraced by the Force. But that embraces and controls the Force. It is not born into this world. Nor does it seek to interpret it. But it has created in its being a world. It has the omniscience of it. It does not labour perpetually. It does not force something else out of itself. It drifts in the overmastering energies of the past. It can no longer control. There is a perfect Form. It is there in its consciousness. It is gradually unfolding it. The world expresses a Truth. It was foreseen by it. It obeys a predetermining will. There is a



self-vision. It is original and formative. It is the growing image of a divine creation.

We work through mentality. It is governed by appearances. That something beyond is vaguely felt. We infer it. What is behind is immanent. It is always present. We perceive a law. It is one of cyclic progress. We infer an ever-increasing perfection of that. It is somewhere foreknown. Everywhere we see a Law. It is founded in self-being. We can penetrate within. We can try to know the rationale of the process. That Law is the expression of an innate Knowledge. This Knowledge is inherent in existence. It is expressing itself. It is implied in the force that expresses it. It is a Law developed by Knowledge so as to allow of progress. It is towards a divinely seen goal. The motion is directed towards it. Our reason seeks to emerge out of the drift. It tries to dominate it. It is a helpless drift. It is a drift of our mentality. We see it. Now we perceive the truth of Reason. Reason is only a messenger. It is a representative. It is a shadow of a greater consciousness. It is an end to itself. It knows all that it is. This source of Reason is a knowledge. Reason is identical with that knowledge. It acts as Laws in the world. We see this as an inference. This knowledge determines its own Law. It is sovereign. It knows what has been. It knows what is. It also knows what will be. It knows all that because it knows itself. Its knowledge of itself is infinite. It eternally knows itself. Therefore, it can do it. It is being that is infinite consciousness. It is infinite consciousness that is omnipotent force. It makes a world. To make a world it makes a harmony of itself. World is its object of consciousness. That we can understand. Our thought can seize hold of it. It knows it as cosmic existence. It is an existence that can know its own truth. It realises its truth in forms. It knows the forms.

We must cease to reason. We must go deep into ourselves. It is the secret centre of Man. There all activity is stilled. In that stillness the higher consciousness is felt. It is manifest to us. It is imperfectly seen by us. It is due to our mental reaction. That reaction is a habit. That is how mind limits itself. Then we can know surely. There is an increasing illumination. Reason’s light is pale. It is uncertain, flickering.

Earlier we know this higher consciousness by Reason. Now we can know it for sure. Knowledge waits there. It is seated beyond Mind. It is beyond intellectual reasoning. Beyond is self-vision. It is illimitable and luminous. There Knowledge is enthroned.

❀❀❀

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

**ஆர்வத்திற்கு எல்லையுண்டு. விரதத்திற்கு எல்லையுண்டு.**

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

பிரம்மத்தைக் காணும் யாத்திரையில் மனிதன் முன்னேற்றம் அடைவது உண்மை. ஆனால், முக்கிய நோக்கம் அகங்காரமாக இருப்பதால் முன்னேறுவது அகந்தையாகும். முன்னேற்றம் இருந்தாலும் அது எதிர்த் திசையிலிருக்கிறது.

***பிரம்மஞானத்தைத் தேடினாலும் அகந்தை ஆட்சி செய்யும்.***

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

கண்ணுக்கு முன்னாலிருப்பதைக் காண மறுப்பவன் மனிதன். 100 முறை சொல்லியதைப் புதியதுபோல் மீண்டும் கேட்பான். அன்னை இதை (**unconsciousness**) கண்மூடித்தனம் என்கிறார்.

***பார்வையற்ற திறந்த கண்கள்.***



# எங்கள் குடும்பம் II

*(சென்ற இதழின் தொடர்ச்சி.....)*

**சிறிய வசதிக்கு உலகைப் புரட்டிப் போராடுபவன், பிரம்மாண்டமான வாய்ப்பைத் தவறவிடுவதை மனதில் கொள்ளமாட்டான்:**

- ✡ **சிறியது கண்ணுக்குத் தெரிகிறது. பெரியது மனத்தில்படவில்லை என்பது நாம் ஏற்கும் விளக்கம்.**
- ✡ **பெருமுயற்சி ஒரு செயல், ஒரு பழக்கம், அது பழகிப் போனது (reflex). அதனால் எண்ணம், உணர்வாகி, செயலாக மாறும் பாதை ஏற்கனவே போடப்பட்டுள்ளது.**
- ✡ **பிரம்மாண்டமான வாய்ப்பை மனம் அறிகிறது. ஆனால் செயலுக்குரிய பாதை ஏற்படவில்லை.**
- ✡ **இதிலுள்ள தத்துவம் என்ன?**
- ✡ **மனிதன் தன் அறிவின் உயர்வால், சமாதியில் பிரம்மத்தைச் சச்சிதானந்தம்எனக் கண்டான்.**
- ✡ **பிரம்மம் சச்சிதானந்தமில்லை. பிரம்மம் நமக்குச் சச்சிதானந்தமாகத் தெரிகிறது.**
- ✡ **பிரபஞ்சம் நமக்கு (values) பண்பாக வருகிறதுஎன்பது ஸ்ரீ அரவிந்தம்.**
- ✡ **உலகம்என ஒருவர் சொல்வது அவரறிந்த மக்கள், உணர்வு, செயல்கள், நிகழ்ச்சிகளாகும்.**
- ✡ **சச்சிதானந்தத்தைச் சமாதியில் காணலாம், பிரபஞ்சத்தைப் பண்பில் காணலாம், செயலை இதுவரை ஏற்பட்ட பாதையில் காணலாம்.**
- ✡ **மனத்தின் தெளிவு, உணர்வின் உற்சாகம், உடலின் பழக்கமின்றி செயல் நடக்காது. இது மனிதனுக்குப் பழக்கமான செயல்களில்**

உள்ளன. மனம் மட்டும் அறிந்த செய்தி நடக்காது. மனிதன் நடக்காததைப் புறக்கணித்து நடப்பதைப் பின்பற்றுகிறான்.

✡ சிறு குழந்தைக்குப் பொம்மை புரியும். புத்தகம் புரியாது. குழந்தை புத்தகத்தை விட்டுப் பொம்மையை நாடுவது இயல்பு.

✡ பறக்கும் விமானம் நமக்கு மேலே போனாலும் நாம் அதில் ஏற முடியாது. ஓடும் ரயிலிலும் ஏற முடியாது. ஓடும் பஸ்ஸிலும் ஏற முடியாது. நம்மை அவர்கள் ஏற்றிக் கொள்ள விருப்பப்பட்டாலும், நாம் நடந்துதான் போகலாமே தவிர இவற்றுள் ஏற முடியாது.

✡ பிரம்மம் நம்மைச் சுற்றியிருந்தாலும், நமக்கு சாப்பாடு பிரம்மம்தான் தெரியும். அசல் பிரம்மம் தெரியாது.

✡ அன்னை என்ற விமானம் நாம் உள்ள இடத்தில் இறங்கி நம்மை அழைக்கிறது. ரயிலாக வந்து ஸ்டேஷனில் நின்று நமக்காகக் காத்திருக்கின்றது. பஸ்ஸாக, காராக நம் வீட்டின் முன் நின்று காத்திருந்தாலும், இவையெல்லாம் நமக்கில்லை எனவும், இவற்றைக் கண்டு பயப்படுவதும், நம்மைப் பிடித்துக் கொண்டு போக வந்ததாகவும் நாம் கருதி விலகுகிறோம்.

✡ இதில் தத்துவம் ஏதேனும் உண்டா? ஆற்றில் நிறைய வெள்ளம் போனாலும், நாயால் மாடுபோல் குடிக்க முடியாது.

❀ அருகில் அன்னையிருப்பதோ,

❀ அன்பாக அழைப்பதோ,

❀ நமக்காகக் காத்திருப்பதோ முக்கியமில்லை.

❀ அன்னையை நம்முடன் தொடர்புபடுத்தும் இணைப்பு, கருவி இல்லாமல் - நம்பிக்கை, பக்தி - நம்மால் அன்னையை ஏற்க முடியாது.

❀ கருவி உள்ளே ஏறிச் செல்லும் படி.

❀ கையால் பிடித்துக் கொள்ள உதவும் பிடி.

❀ சத்தியஜீவியம்என்ற கருவியில்லாமல் நிர்விகல்ப சமாதியில் ரிஷிகளால் முழுப்பிரம்மத்தைத் தொட முடியவில்லை.



❀ கருவியின்றிக் காரியமில்லை.

தனக்குப் பெருமை வேண்டும் என்பதையே குறிக்கோளாகக் கொண்டவன் தன் SSLC படிப்பை அடுத்தவர் M.A. படிப்பைவிட உயர்ந்ததாகக் கருதுவான்:

✡ மனிதன் தன் முயற்சியை முழுவதும் விவரமாக அறிவான்.

✡ அது பெருமுயற்சி, அதைவிடத் தன்னால் செய்யக் கூடியதில்லைஎன அறிவான்.

✡ தமக்குப் பெரிய முயற்சி, அதிகபட்ச முயற்சிஎன்பதை அனைவருக்கும் பெரியதுஎன நினைப்பான்.

✡ ஏதாவது காரணம் கற்பிப்பதில் மனிதனுக்கு நிகர் அவனே.

✡ அதைப்போல் தான் இதுவரை சாதித்ததை உலகில் - அவனுடைய உலகில் - சிகரம்எனக் கருதி, மகிழ்ந்து, போற்றிப் புகழ்ந்து, புளகாங்கிதமடைவான்.

✡ அதே காரணத்தால் பிறர் சாதனையின் குறை தெரியும்.

✡ மனிதனுக்கு தன்னம்பிக்கை வாழத் தேவை. அதை அவன் பெறுவது இப்படி.

✡ எவரைக் கண்டாலும் அவர் குறையை தன் நிறைவுடன் - நிறைவுஎன இவனே கற்பித்ததுடன் - ஒப்பிட்டு மகிழ்வான்.

✡ உண்மையில் மனிதனுக்கு ஒரு சிறப்புள்ள நேரம் உண்டு.

✡ எதுவுமே இல்லாதவன் எல்லாமிருப்பதாக நினைப்பவன் மனிதன்*. தான் பிரம்மம்என்பதை தனக்கே மனிதன் நினைவுபடுத்திக் கொள்ளும் வகையிது.

✡ அப்படிப்பட்டவனுக்கு ஒரு விஷயம் - படிப்பு, திறமை, பாட்டு, சிவந்த நிறம், உயரம் - இருந்துவிட்டால் அவன் மனம் அவன் கற்பனையைத் தீவிரமாக நம்பும்.

✡ மனிதன் பிரம்மத்தை உணர வேண்டும்என்பதை இப்படிப்* பூர்த்தி செய்துகொள்கிறான்.

✡ ஒரூரில் ஓர் எலிமெண்டரி பள்ளி. அந்த ஆசிரியர் ஆர்வமாகத் தமிழ் போதிப்பார். அவருடைய பால்ய நண்பர் வக்கீல். M.P. ஆனார். பிரபல பேச்சாளருமானார். பால்ய நண்பரை மறக்கவில்லை என்பதால் பள்ளி ஆசிரியருக்குப் பெருமை பிடிபடவில்லை. M.P. ஆசிரியர் வீட்டுக்கு வருவார். அவரிடம் படித்த பையன் உள்ளூர் ஹைஸ்கூலில் படிக்கிறான். அங்குள்ள தமிழ் பண்டிட் ஒரு சிறிய மடத்திற்கு அவருடைய சொந்த ஊரில் மடாதிபதி. ஊரில் பெரிய மனிதர். மடாதிபதிக்கு அதிகத் தமிழ்ப் படிப்புண்டு. இவர் சிறந்த ஆசிரியர். இவர் பாடம் நடத்தினால் நேரம் போவது தெரியாது. ஏன் மணியடித்தது என்றிருக்கும். D.E.O. இன்ஸ்பெக்ஷனுக்கு வந்தால் இங்கிலீஷ் வகுப்பில் ½ மணியிருப்பார். மற்ற பாடங்களை 15 நிமிஷம் கவனிப்பார். தமிழ் வகுப்பில் 10 நிமிஷத்திற்கு மேலிருக்கமாட்டார். இந்தப் பள்ளியில் D.E.O. வந்தால் பீரியட் முடியும்வரையுமிருப்பார். மேலும் பாடம் நடத்தச் சொல்வது வழக்கம். ஒரு D.E.O. 3 பீரியட் இந்த பண்டிட் பாடத்தை உட்கார்ந்து கேட்பார். பள்ளியில் பண்டிட்டிற்கு ஹெட்மாஸ்டரைவிட அதிக மரியாதை.

எலிமெண்டரி பள்ளி ஆசிரியர் ஒரு சமயம் தம் மாணவன் மேற்சொன்ன பள்ளியில் படிப்பவனைப் பார்த்து, "உங்க ஹைஸ்கூலில் தமிழில்லையல்லவா? நம்ம பள்ளிபோல் அங்கு தமிழில்லை" என்றார்.

❀ மனிதன் தன் பெருமையை தானே கொண்டாடுகிறான்.

❀ தான் பிரம்மம்என்பதை, சிறியது தனக்கே சொல்லும் பாஷை இது.

❀ வீட்டு வேலை செய்யும் பெண் அனைவராலும் மக்குப் பட்டம் பெற்றவள். பள்ளிக்கூடம் போகாதவள். "இந்த வீட்டில் எவருக்கும் என் புத்திசாலித்தனத்தைப் பார்க்கும் அளவு திறமையில்லை'' என்று பேசுகிறாள்.



3 ஏக்கர் நிலம் உள்ள பழைய பணக்காரன் 300 ஏக்கர் நிலமுள்ளவனை ஏழையாகக் கருதுவான். இன்றைய பணம் பணமில்லை:

✡ அவன் மனம் அதை நம்பும்.

✡ நம்புவதால் அவனுக்குத் தெம்புவரும். 3 ஏக்கரில் அவனால் குடும்பம் செய்யமுடியும்.

✡ இதன் தத்துவத்தின் ஓர் அம்சத்தை ஏற்கனவே கருதினோம். மற்ற அம்சங்களுண்டா?

✡ சொத்தை இழந்தவன், அந்தஸ்தை இழந்தவன்.

✡ எதுவும் பதிலுக்குப் பெறாமல் போகாது.

✡ மனிதன், ஸ்தாபனம், பொருள், என்பவை அழிவதில்லை. அவற்றின் ரூபம் மாறும், குணம் மாறும். அத்துடன் பொதுவாக வளர்ச்சி இருக்கும்.

✡ வளர்ச்சியற்ற நஷ்டம் உண்டு. அது விதிவிலக்கு.

✡ சொத்து போனால், அனுபவம், அறிவு, இதுவரை இல்லாத திறமை, பொறுமை வந்திருக்கும். அவற்றை அவன் அறியமாட்டான். அறிந்தால் அதைப் போற்றமாட்டான்.

✡ உறவினர்களைத் தொழிலில் சேர்க்கக் கூடாது, நண்பர்களை ஓர் அளவுக்குமேல் நம்பக் கூடாது, நம் கையால் நடக்காதது கூடிவாராது, நம் வாயே நமக்கு எதிரி, அவசரம் கெடுக்கும், ஒரு பொருளைத் தேடிப்போனால், அது நாம் எதிர்பாராத தொந்தரவுடன் வந்து சேரும்எனப் பல அனுபவங்களில் ஒன்றோ, பலவோ வந்திருக்கும்.

  ❀ வந்த அனுபவத்தைப் பின்பற்றினால் மின்னல் வேகத்தில் வாழ்வு மாறும்.

✡ மனிதன் பெற மறுக்கும் அனுபவம் வலிய தொந்தரவாக வந்து சேரும்.

✡ பெற்ற அனுபவத்தைப் பயன்படுத்த மனம் வாராமல் தவிப்பான்.

✡ மனிதன் ஜடத்திலிருந்து மனத்திற்குப் போக நேரம் வந்தபின்

  ❀ ஜடத்தை வலியுறுத்துபவன் மேற்சொன்னபடிப் பேசுவான்.

✡ ஜடவாழ்வு சந்தர்ப்பம் வந்தபின் வளர மறுப்பதன் வகைகளில் மேற்சொன்ன பேச்சு ஒன்று.

✡ இது தவறுஎனில் எது சரி?

✡ இன்றைய பணம் இன்று தேவைப்படும் திறமைக்கு வந்துள்ளது என்பதை அறிந்தால், அந்தத் திறமையைப் பெறமுயன்றால், மற்றவர்களைவிட அதிகத் திறமை பெறலாம் - அதற்குப் பதிலாக மேற்சொன்ன அபிப்பிராயம் அவனை ஆக்ரமிக்கிறது.

✡ அப்படிச் செய்தால் ஜடத்தை வலியுறுத்தாமல் ஜடத்திலிருந்து மனத்திற்குப் போவான், கவர்னர் மாளிகைக்குப் போக புதுடிரஸ் கேட்கமாட்டான்.

✡ இழந்த சொத்து தந்த அறிவைக் கண்டு, அதைப் பயன்படுத்தும் வகையைக் கண்டுபிடிக்க வேண்டும். நிலமாகச் சொத்தை இழந்து Share Certificate ஆக சொத்து சேரும் வாய்ப்பு வந்துள்ளது என்பதை உணருதல் அவசியம்.

Ph.D. படித்தவன் பெர்னாட்ஷாவைப் படிக்காதவன்என உள்ளூர பெருமிதம் கொள்வான். பத்து முறை தவறு செய்து நஷ்டப்பட்டாலும், பதினோராம் தரம் அதையே உற்சாகமாகச் செய்வான். தனக்கு வந்த V.C. post உடன் உள்ளவர்க்கு அவர்கள் நல்ல குணத்தால் போவதைக் கண்ணால் கண்டாலும், தன் குணக்குறை விளங்காது. அதிர்ஷ்டம் இல்லை எனச் சொல்லிக் கொள்வான்:

✡ ஏன் மனிதன் இப்படி நடக்கிறான்?

✡ 'பணம் என்றால் பிணமும் வாய் திறக்கும்'. மரியாதை பணத்தையும் கடந்தது, பெருமை மரியாதையிலிருந்து வருவது. *மனிதன்*



*பிறந்ததிலிருந்து அவன் தன் ஆதியான இறைவனைத் தேடுகிறான்.* இறைவனைத் தேட உயர வேண்டும்.

❀ மனிதன் உள்ளது சமூகம்.

❀ இங்கே உயரே போனால், இறைவனை நாடுவதாகும்.

❀ பணம் உயர உதவும் என்பதால் பணம் முக்கியம்.

❀ மரியாதை பணத்தைவிட உயர்த்தும்.

❀ பணம் தருவது மரியாதை.

❀ அதனால் மனிதன் பணத்தைவிட மரியாதையைத் தேடுகிறான்.

❀ பெருமை மரியாதையை மனம் கொண்டாடுவது.

❀ பெர்னாட்ஷா உயர்ந்தவர்.

❀ தன்னை அவருக்குச் சமமாக வைப்பான்.

❀ அவர் படிக்காத படிப்பைத் தான் படித்திருப்பதால் மனம் சந்தோஷப்படும்.

❀ உடல் திரும்பத் திரும்பச் செய்யும்.

❀ திரும்பத் திரும்பச் செய்வதால் அதற்குத் திறமை வரும்.

❀ திறமை வந்தால் தெம்பு வரும்.

❀ தெம்பு வருவது உடல், உயிர் பெறுவது.

❀ உடல் உயிர் பெறுவது உயர்வது.

❀ தனக்கு வந்தது அடுத்தவருக்குப் போனது, நமக்கில்லாத நல்ல குணம் அவருக்கிருப்பதால்என்று தெரிந்தாலும், அதை மனம் ஏற்றால் அவர் என் கணிப்பில் என்னைவிட உயர்ந்தவராகிவிடுகிறார்.

❀ அகந்தைக்குத் தனக்கு நிகராக எவரையும் ஏற்க முடியாது. தம்மைவிட உயர்வாக எப்படி அடுத்தவரை நினைக்க முடியும்?

- ❀ அதிர்ஷ்டத்தையும், தன் உயர்வுக்கு ஈடாக வைக்க மாட்டான்.
- ❀ அதனால் 'அவருக்கு அதிர்ஷ்டம்' என்பான்.
- ❀ அகந்தை தன் உயர்வைக் கருதாவிட்டால் உயிருடனிருக்க முடியாது என்பதால், எப்பொழுதும் தன் உயர்வை நினைக்கும். அதுவே பெருமை.
- ❀ பெருமை என்பது aspiration of the ego, அகந்தையின் ஆர்வம்.
- ❀ ஆர்வமில்லாத ஜீவனில்லை.
- ❀ உயர்ந்த மரங்கள் ஆர்வமிகுதியால் வானை எட்ட முயல்கின்றனஎன பகவான் கூறுகிறார்.
- ❀ அகந்தையுள்ளவனுக்கு அவன் அகந்தையைச் சுட்டிக்காட்ட இறைவன் அவனுக்குரியதை அடுத்தவனுக்குக் கொடுக்கிறான்.

80ஆம் வயதில் 12 மைல் உடனிருப்பவர் ஓடினாலும் 50ஆம் வயதில் தம்மால் ½ மைல் நடக்க முடியவில்லை என்பதை பழக்கம்என மனம் அறியாது;
நல்ல சகுனம் 400 கண்ணில்பட்டாலும், மனத்தில் படாது;
தம் கடுமை பிறரைப் பாதிப்பது தெரியாது:

- ✡ சிருஷ்டி ஏற்பட்டது Self-Conceptionஆல். தானே பிரம்மம் விரும்பி செய்தது.
- ✡ *மனித வாழ்வு சிருஷ்டியின் சிறு உருவம். அதனால் மனிதன் தானே விரும்பி ஏற்பதைத் தவிர மற்றபடி கண்ணில்படுவதாலோ, பிறர் சொல்வதாலோ ஏற்கமாட்டான்.*
- ✡ அப்படி ஏற்காமலிருக்க அறிவு இடம் தரும்.
- ✡ எதற்கும் வேறொரு காரணம் கற்பிக்க அறிவு இடம் தரும்.



- ✡ 'உன் உடம்புக்கு 12 மைல் ஓடுவது ஒத்துக் கொள்ளும். எனக்கு ஒத்துக் கொள்ளாது'என மனம் கூறும்.
- ✡ கண்ணில் படுவது, மனத்தில் படாதது மனத்தின் இயல்பு.
- ✡ மனம் பார்ப்பவற்றுள் தனக்கு வேண்டியதை வேண்டாததிலிருந்து பிரித்து எடுத்துக்கொள்ளும் இயல்புடையது.
- ✡ மனிதன் உணர்வாலானவன். அவன் கடுமை பிறரைப் பாதித்தால் அவனுக்குச் சிரமமில்லை. தனக்குச் சிரமமில்லாதது, தன் மனத்தைத் தொடாது.
- ✡ சத்தியஜீவியம் இரண்டாகப் பிரிந்து மனம் ஏற்பட்ட பொழுது,
  - ❀ அதன் திறமை முழுமையை ஒரே சமயத்தில் காண இயலாது.
  - ❀ ஒரே சமயத்தில் காணாவிட்டாலும், மாறி மாறி இருபுறமும் காணவல்லது.
  - ❀ ஒரு புறம் பார்க்க மனம் மறுப்பதால் அஞ்ஞானம் ஏற்படுகிறது.
  - ❀ அந்த நேரம் மனம் சத்தியஜீவியத் தொடர்பை இழக்கிறது.
  - ❀ தான் காண முடிவதைக் காண மறுப்பது அஞ்ஞானம்,
  - ❀ பிறர் வதைவதைக் கண் பார்த்தாலும், மனம் பாராமலிருப்பது மனத்தின் அஞ்ஞானம்,
  - ❀ பார்க்காமலிருந்தால் பிறர் வேதனை தெரியாது.
  - ❀ உண்மையில் மனம் தன் திறமையை ரசிக்கிறது.
  - ❀ தன் செயல் அடுத்தவரைத் துன்புறுத்துவது தன் திறமைஎன மனம் கொள்வதால், தன் செயலை ரசிக்க அது பிறரை அதிகமாகத் துன்புறுத்துகிறது.
  - ❀ உண்மையில் பிறர் வேதனை தெரியாமலில்லை.
  - ❀ பிறர் படும் வேதனை தன் திறமைஎன தன்னை இரசிப்பதால் கடுமை செயல்படுகிறது.
  - ❀ கடுமையானவரை ஏற்கலாம், கடுமையை ரசிப்பவரை என்னால் ஏற்கமுடியாது என்கிறார் அன்னை.

- ❀ அவனையும் மறுக்க ஆண்டவனுக்கு உரிமையில்லை போலும்.
- ❀ அஞ்ஞானம் உள்ளது. அஞ்ஞானத்தை வளர்ப்பது மீண்டும் பழைய நிலையை வற்புறுத்துவதாகும். அதற்கு இடமில்லை.

பகவான் தருவது உலகிலில்லாதது;
அதைப் பெற நம்பிக்கையோடு நாம் ஆர்வமாகச் செய்ய வேண்டும்;
அதைச் செய்யாவிட்டாலும், கொடுப்பவரையே நம் பங்கையும் சேர்த்துச் செய்எனக் கேட்கக் கூடாது;
அப்படிக் கேட்பது நமக்குப் பலிக்காதுஎன அறிவிப்பதாகும்:

- ✡ உலகில் எது முதலில் வந்தாலும் உடனே பரவ முடியாது.
- ✡ சைக்கிள் வந்த காலத்தில் அதன் மீது சவாரி செய்பவனைத் தெய்வம் என நினைத்து இது நமக்கில்லைஎன மனம் விலகிவிடும். இன்று அனைவரும் சைக்கிள் விடுகிறார்கள்.
- ✡ உலகிலில்லாதது நமக்குப் பலிக்காதுஎன்று மனம் நினைப்பது தவறு.
- ✡ பகவான் தருவது அதிர்ஷ்டமான அருள், அது நமக்குப் பலிக்கும்என மனம் நம்பவேண்டும்.
- ✡ 'சைக்கிளை எனக்காக நீங்களே விடுங்கள்',
  'மருந்தை எனக்காக டாக்டரே சாப்பிடட்டும்',
  'ஆசிரியரே எனக்காகப் பரீட்சை எழுதட்டும்',
  என நாம் கேட்பதில்லை. கேட்டால் பலன் செய்பவருக்கேயாகும். நமக்கு வாராது.
- ✡ ஏன் அப்படி மனிதன் கேட்கிறான்?
  வலிய ஆண்டவன் வருவதால், மனிதன் அப்படிப் பேசுகிறான்.
  மனிதனே ஆண்டவனை நாடி வந்தால் அப்படிக் கேட்கமாட்டான்.
  *மனிதன் ஆண்டவனை நாடிவர நாளாகும், அதைச் சுருக்க வேண்டும் என ஆண்டவன் தன் இச்சையாகச் செயல்படுவது அருள்.*



அருள் வலிய வரும்.
அன்பு வலிய வரும்.
பெறுபவர் நன்றியுடன் பெற்றால் பலனுண்டு.
பெறுபவர் தம் பங்கைச் செய்ய முயன்றால் பலிக்கும்.
நன்றியுடன் பெறுபவருண்டு.
பெற்று தம் பங்கைச் செய்து பலனடைபவருண்டு.
வேண்டாம்எனச் சொல்பவருண்டு.
வேண்டாம்என்பதை மனிதன் 'என் பங்கை நீங்களே செய்யுங்கள்' என்கிறான்.
அப்படிச் சொல்வது 'இது பலிக்காது'எனக் காட்டுகிறது.

- ✡ புஞ்சை நிலத்தில் நீர் ஊற்று கிடைத்தவுடன் விலை அதிகமாகிறது.
  அதிக விலையை அனுபவிக்க அதிக மூலதனமிட வேண்டும்.
  மானேஜரை முதலாளி 'நீங்கள் அதையும் பெற்றுவாருங்கள்' என்பது இந்தச் சொத்து என் கையை விட்டுப் போகும்என அறிவிப்பதாகும்.
- ✡ உள்ளதையே உலகம் கொடுக்காது.
  இல்லாததை பகவான் கொடுக்கிறார்எனில் இதுவரை இல்லாத நல்ல உயர்ந்த பழக்கத்தால் அதைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.
  'எனக்கு வேண்டாம்' என்பதை எந்தப் பாஷையில் சொன்னாலும் பொருள் நம்மைவிட்டு விலகிப் போகும்.
- ✡ கிருஷ்ண பரமாத்மா தம் தெய்வீக சக்தியைப் பாண்டவர்களுக்களிக்க அர்ஜுனனால் முடியாத காரியத்தைச் செய்யச் சொல்வதே பகவத் கீதை. அர்ஜுனன், கிருஷ்ணனை ''நீங்களே ஆயுதம் தாங்கிப் போரிடுங்கள்'' என்று கூறவில்லை.

பெரியவன் - நமக்குக் கொடுத்தது பார்ட்னராயிற்றே, அவருக்கு நன்றி செலுத்த வேண்டாமா?
சிறியவன் - நம்மை அனைவரும் ஊரைவிட்டு விரட்ட முயல்கிறார்கள். நாம் மாட்டிக் கொண்டு விழிக்கிறோம் (இது சிறியவனின் கனவு):

*நன்றியறிதல்:* ஒரு பிரமோஷனை நமக்குப் பெரிய அதிகாரி கொடுத்தால், அந்த ஆர்டரை நம் ஆபீஸ் அதிகாரி எழுதுகிறார். கொண்டு வந்து கொடுப்பது பியூன். அனைவருக்கும் நன்றி உரித்தானது. பியூனுக்குச் சொல்லும் நன்றி நல்ல சொல். அதிகாரிக்கு மனம் நன்றி கூறுகிறது. பெரிய அதிகாரிக்கு நன்றி சொல்வது உணர்வு. ஆத்மாவின் நன்றி அன்னைக்கு உரியது.

நல்ல சொல் முகத்தை மலரச் செய்யும்.

மனம் கூறும் நன்றி தழுதழுக்கும்.

ஆத்மாவின் நன்றி உடல் புளகாங்கிதம் அடைந்து புல்லரிக்கும்.

நன்றி ஆத்மா எழுந்து, மனத்தை நிரப்பி, முகத்தை மலரச் செய்வது முறை.

- ✡ நாம் அன்னையிடம் வரக் காரணமானவர் ஒரு நண்பர்.
- ✡ நமக்கு அன்னையை விவரமாகக் கூறி ஈடுபாட்டை ஏற்படுத்தியவர் ஓர் அன்பர்.
- ✡ நம்மை அழைத்தது அன்னை.
- ✡ நாம் யாருக்கு எந்த அளவில் கட்டுப்பட்டுள்ளோம்?
- ✡ கருவியான அன்பருக்கு நாம் கடமைப்பட்டுள்ளோம்.

ஆனால் அதை அவர் வேறு காரியங்கட்காகப் பயன்படுத்துவதை அனுமதித்தால் அது தகாது.

கருத்தை விளக்கியவர் கருவி, கர்த்தா இல்லை.

கருத்தை விளக்கியவரைக் கர்த்தாஎனக் கருதுவது T.V. விற்பனை செய்பவரே அதைச் செய்கிறார்என நினைப்பதாகும்.

அழைத்தது அன்னை.

வந்தது நாம்.

நாம்என்பது ஆத்மா.



ஆத்மா அன்னைக்கு, அவர் அருளுக்குக் கடமைப்பட்டது.

கருத்தே தெளிவுபடுத்தியதுஎன்றால் தெளிவுக்குரிய மனம் தெளிவைத் தந்தவருக்குக் கடமைப்பட்டது.

உரிய நன்றியைச் செலுத்தாதது தவறு.

நன்றியின் பேரால் அடிமைப்படுவது அர்த்தமற்றது.

ஆன்மா உணர்ந்து, அவ்வுணர்வு மனத்தில் தெளிவுபட்டு, அத்தெளிவு நல்ல சொல்லாக வாயில் வந்தால், அவரவருக்குரியது போகும். தவறு வாராது.

- ✡ அறிமுகப்படுத்தியவரே அனைத்தும் என்றால் அவருக்கு அனாவசியமாகக் கட்டுப்படுவோம்.
- ✡ கருத்தை எடுத்துக் கூறியவரே முக்கியம் என்றால், நாம் அன்னையின் கருத்தைப் பின்பற்றுவதற்குப் பதிலாக, அவருடைய கருத்தை நடைமுறையில் பின்பற்றி அவருடைய சிஷ்யராவோம்.
- ✡ சிறியவன் கனவு குடும்பம் இருக்கவேண்டிய நிலையைக் காட்டுகிறது. கனவு சூட்சுமம். சூட்சுமமான கனவை சூட்சுமமாக அறியவேண்டும்.
    - ❀ சூட்சுமம் சூத்திரம்.
    - ❀ சுமுகம் சூட்சுமத்தைப் பூர்த்தி செய்யும்.
    - ❀ சூட்சுமத்தைவிட்டுத் தோற்றத்தைப் பின்பற்றினால் இரண்டும் போகும்.

நம்ம தரித்திரத்தை மதர் அதிர்ஷ்டமாக்கிவிட்டார். நாம் அதையே பிடித்துக் கொண்டிருக்கக் கூடாது... போன தரித்திரத்தை மீண்டும் கூப்பிடக் கூடாது. காரம் தரித்திரம். அமைதி அதிர்ஷ்டம்:

- ✡ நமக்குப் பிறப்பில் தரித்திரம். நம்மையறியாமல் அன்னை அதை அதிர்ஷ்டமாக்கிவிட்டார்.

✡ தரித்திரத்தின் சின்னமான காரமான பேச்சு, சிக்கனம், அல்பபுத்தி, ஒட்டுக் கேட்பது போன்ற ஆயிரங்குணங்களை நாம் விடாவிட்டால், தரித்திரத்தைப் பிடித்துக்கொண்டிருக்கிறோம்என்று பொருள்.

✡ தரித்திரம் போனதும் நமக்குத் தெரியாது. அதிர்ஷ்டம் வந்ததும் தெரியாது.

❀ அன்னையை அறிந்தவுடன் அது நடந்துவிட்டது.

❀ அதுபோல் காரமாகப் பேசினால், பேசநினைத்தால் தரித்திரம் தானே வரும்.

✡ பிரார்த்தனை பலிக்காத நேரம் எண்ணம் போதாது, உணர்ச்சி வேண்டும் என்கிறோம்; உணர்ச்சி போதாது செயல்வேண்டும் என்போம்.

எப்படி எண்ணமும் வருமுன் அதிர்ஷ்டம் வந்தது?

❀ ஜடலோகத்திலிருந்தால் செயல் அவசியம்.

❀ சூட்சுமலோகத்திற்கு உணர்வு அவசியம்.

❀ அதுவே மனத்தின் சூட்சுமமானால் எண்ணம் அவசியம்.

❀ காரணலோகத்திற்கு எண்ணமும் அவசியமில்லை.

❀ அருள் காரணலோகத்தில் செயல்படுவதால் நினைப்பதன்முன் நடந்துவிட்டது.

✡ அது அன்னையை ஏற்குமுன்,

✡ அன்னையை ஏற்றபின் நடப்பவை பெரியவை, பிரம்மாண்டமானவை.

❀ நினைவு எண்ணம்.

❀ உணர்வு சூட்சுமம்.

❀ செயல் ஜடம்.

❀ நினைத்து, உணர்ந்து, செயல்பட்டால் நடக்கத் தவறாது.

❀ நாம் சூட்சுமமானால் செயலுக்குமுன் நடந்துவிடும்.

❀ மனத்தில் சூட்சுமமானால், நினைத்தவுடன் நடந்துவிடும்.



❀ நம் ஜீவன் காரணதேகத்திலிருந்தால் (Causal World) நினைக்காமலே நடக்கும்.

❀ சமர்ப்பணம் இத்தனை நிலைகட்கும் உண்டு.

❀ சமர்ப்பணத்தால் எந்த நிலையில் எப்படி சாதிப்பதுஎன அறிய வேண்டும்.

❀ சமர்ப்பணத்தால் ஒரு நிலையிலிருந்து அடுத்த நிலைக்கு எப்படிப் போவதுஎன அறியலாம்.

பெரியவன் - அம்மா அதிர்ஷ்டம், நாங்களெல்லாம் தரித்திரமா?

✡ தானே கற்காதது கற்றதன்று என்பதன் தத்துவம் சிருஷ்டியே Self-Conceptionனால் ஏற்பட்டது என்பதால்.

✡ ஞானம் — கற்பது — ஆனந்தம் தரும்.

✡ நாங்களெல்லாம் தரித்திரம்என்ற ஞானம் சுடும்.

✡ சுட்டால், ஆனந்தம் வாராது, வலி எழும்.

✡ பிறர் சொன்னால் சுடும். அதனால் சொல்லக்கூடாது.

✡ தானே தரித்திரம்எனப் புரிந்து கொண்டாலும் சுடும். சுட்டால் பலனிருக்காது.

✡ தானே அறிந்ததை - தரித்திரம்என அறிந்ததை - ஞானமாகவோ, சுடுவதாகவோ நாம் எடுத்துக் கொள்வது நம்முடைய choice.

✡ சுட்டால் பலன் தாராது. ஞானம் ஆனந்தம் தரும் என்பதை ஆனந்தம் வருமாறு ஞானத்தைப் பெறவேண்டும். அது opening, receptivity, sincerity.

✡ ஆனந்தமாக ஏற்றால் ஞானம் வரும் என்பதால் 'தரித்திரம்' என்பதை ஆனந்தமாக ஏற்க வேண்டும்.

✡ தாமே தேடிய ஞானம் கிடைத்தால் ஆனந்தம் ஏற்படும்.

- ✡ தாமே தேடுவது aspiration ஆர்வம்.
- ✡ ஆர்வம் ஞானத்தைத் தேடும் பொழுது வரும் ஞானத்தால் நாம் சுருங்கக்கூடாது என்பதை மனம் புரிந்துகொள்ளும், உணர்ச்சி புரிந்து கொள்ளாது.
- ✡ மனம், மனத்தின் உயர்ந்த பகுதி - சைத்தியப்புருஷன் - சுருங்காது.
- ✡ மனமே சமயத்தில் சுருங்கும்.
- ✡ சைத்தியப்புருஷன் ஒருபொழுதும் சுருங்காது. ஞானம் அதைச் சுடாது.
- ✡ சைத்தியப்புருஷன் வெளிவருவது பக்குவம்.
- ✡ ஆண்டவன் மீதுள்ள நல்லெண்ணம் தம்மைச் சுடாமல் ஞானத்தைப் பெறும்.
- ✡ சைத்தியப்புருஷனை தியானத்தில் அடைய முடியாது.
- ✡ சைத்தியப்புருஷனைச் சமர்ப்பணத்தால் அடையலாம்.
- ✡ Let Thy will be done, Not my will. சமர்ப்பணத்தைப் பூர்த்தி செய்யும்.
- ✡ இதைத் தொடர்ந்து சொன்னால் சமர்ப்பணம் பலிக்கும்.
- ✡ எந்தச் செயலையும்விட இதைச் சொல்ல விருப்பப்படுவது சமர்ப்பணத்திற்கு உதவும்.
- ✡ *சமர்ப்பணம் மற்ற செயல்களைவிட இனித்தால் சமர்ப்பணம் பலிக்கும்.*

பிறருக்கு உதவி செய்வது அதிர்ஷ்டம், அதை நாம் செய்கிறோம் - கணவர்;
அதுவும் அம்மாவுக்கு ஆகாது - பெரியவன்:

- ✡ எது அதிர்ஷ்டமோ, அருளோ, அதையே செய்யக்கூடாது என்பதில் தத்துவம் உண்டா?
- ✡ அதிர்ஷ்டமும் அருளும் செயலிலில்லை, செய்பவரில் உள்ளது.
- ✡ செய்பவர் அகந்தையானால் இம்முரண்பாடுண்டு.
- ✡ செய்வது வளரும்ஆன்மாவானால் இம்முரண்பாடில்லை.



- ✡ வளரும்ஆன்மா எதைச் செய்யவேண்டும்?
- ✡ வளரும்ஆன்மாவுக்குச் செயல் முக்கியமில்லை, சமர்ப்பணம் முக்கியம்.
- ✡ சமர்ப்பணமானபின் உதவி செய்வதும், செய்யாததும் ஒன்றே.
- ✡ என்ன செய்யவேண்டும்என்பது சமர்ப்பணத்திற்கில்லை.
- ✡ செய்ய வேண்டியது சமர்ப்பணம்.
- ✡ சமர்ப்பணம் செய்தால் முரண்பாடு என்ன ஆவது?
- ✡ முரண்பாடு அகந்தைக்கு, சைத்தியப்புருஷனுக்கன்று.
- ✡ சமர்ப்பணம் அகந்தையிலிருந்து நம்மை சைத்தியப்புருஷனுக்கு நகர்த்தும்.
- ✡ செயலின் முரண்பாடு என்ன ஆயிற்று?
- ✡ முரண்பாடு செயலில் எப்பொழுதுமேயில்லை.
- ✡ செயலே முக்கியமில்லை, செய்பவன் முக்கியமா?
- ✡ மேற்சொன்ன சட்டம் அகந்தைக்கு மட்டுமா?
- ✡ உதவி செய்வது யாருக்கு அதிர்ஷ்டம்? சைத்தியப்புருஷனுக்கு என்றால் அதிர்ஷ்டம் உதவியில் இல்லையா?
- ✡ உதவிஎன்ற செயல் ஒருவரை அடுத்தவரோடு இணைப்பதால், வளரும்செயல், அதனால் அதிர்ஷ்டம்.
- ✡ அதிர்ஷ்டமான செயலை அகந்தை ஆபத்தாக்குகிறது.
- ✡ உதவிஎன்ற செயலுக்கு அதிர்ஷ்டம்என்ற குணம் உண்டுஎன்று ஆகிறதே.
- ✡ உதவியும், உபத்திரவமும் செய்பவரைப் பொறுத்து நல்ல பலனை தரும்.
- ✡ பலன் நல்லதானாலும், செயல்என்ற அளவில் உதவி, உபத்திரவம் வேறுபடுகின்றன அன்றோ.
- ✡ நல்ல பலன் பல்வேறு வகைகளிலும் வரும்.
- ✡ பல்வேறு வகையான செயல்கள் உண்டுஎன்றாகிறதே.

- ✡ செயல்களின் தன்மை வேறுபடுவது உண்மை. பலன் (plane) செய்யும் நிலையைப் பொருத்தது.
- ✡ செயலுக்குக் குணம் உண்டுஎன்பது உண்மை.
- ✡ ரூபத்திற்கும், செயலுக்கும் (சக்தி) குணம் உண்டு.
- ✡ குணம் தரும் பலன் யார் செய்வது, எந்தநிலையினின்று செய்கிறோம் என்பதைப் பொருத்தது.
- ✡ அகந்தை அழிந்தபின் செயலுக்குக் குணம்என்பது உண்டு.
- ✡ ரூபம் போனதுபோல் குணமும் போனபின்பே ஜீவியம் எழுமா?
- ✡ நமக்கு இலட்சியம் ஜீவியமா, சத்தியஜீவியமா?
- ✡ ரூபமும், குணமும் அகந்தை போனபின் சத்தியஜீவியமாகின்றன. ஜீவியம் அடுத்த கட்டம்.
- ✡ பூரணயோகம் சத்தியஜீவியத்துடன் முடிகிறது. அதைக் கடந்தது பூரணயோகத்திற்குரியதன்று.

ஏன் உதவி செய்பவருக்கு ஊறு செய்யவேண்டும்?
ஏன் என்பது பிறகு. நடப்பது இது;
கல்லீரல் கிடைக்கப் பிரார்த்தனை செய்த தங்கையிடம் அக்கா சண்டை போடுகிறாள்:

- ✡ நம்மைக் காப்பதே முக்கியம்என்றால், உதவி செய்யக்கூடாது.
- ✡ அகந்தையில் நின்று உதவி செய்யக் கூடாது.
- ✡ அகந்தையில்லாமல் உதவி செய்தால் சண்டை வாராது.
- ✡ ஏன் சண்டை வருகிறதுஎன்பது தத்துவம்?
- ✡ உதவிஎன்பது தொடர்பு.
- ✡ தொடர்பு இருபுறமும் உள்ளது.



- ✡ நாம் செய்தது உதவி. அகந்தையில்லாவிட்டால் பிரதிபலனாக உதவி வரும்.
- ✡ அகந்தையிருந்தால் உபத்திரவம் வரும்.
- ✡ உதவிஎன்பது செயலளவில் நல்லதா?
- ✡ உதவி உயர்ந்த செயல்தானா?
- ✡ மேலும் நாம் செய்யும் உதவியின் செயலும் வரும் உபத்திரவத்தின் செயலும் தன்மையில் ஒன்றுபடும்.
- ✡ ஒருவர் நிலம் வாங்கும்பொழுது அதில் பாதியை அடுத்தவர் கேட்டார். அடுத்தவருடைய மனையை சர்க்கார் எடுத்துக் கொண்டது. கேட்டது நிலம், போனது மனை, இந்தத் தொடர்பு அந்தச் செயலிலிருந்து எழுவதைக் காட்டுகிறது.
- ✡ உதவியும், உபத்திரவமும் நிலத்திலேயே இருந்தால் அவர்கள் பர்சனாலிட்டி ஒரே அளவிலிருப்பதாக அர்த்தம். கேட்ட நிலத்தின் விலை 2900. போன மனைக்கு நஷ்ட ஈடு ரூ.2450. மேலும் நிலத்தின் விலை 2500 ஆக நிர்ணயிக்கப்பட்டு 400 ரூபாய் இனாமாகக் கொடுத்தார்கள். நிலத்தைக் கேட்டால்,
  - ❀ நிலம் மனையை அவரிடமிருந்து எடுப்பது,
  - ❀ கேட்பவர் மனம் வேகமாக இருக்கிறது என்று காட்டுகிறது.
  - ❀ யார் நிலத்தைக் கேட்டாரோ, அவரே மனையைக் காப்பாற்றினார்.
  - ❀ ரூ.2450 சர்க்கார் கொடுக்க முடிவு செய்ததை 47,000 ரூபாய்க்கு விற்றார். முதலில் 17,000 ரூபாய்க்கு விலைபேசி முடித்தார்.
  - ❀ நிலம் வாங்கியவர் 5800 ரூபாய்க்கு வாங்கினார். 47,000 கிட்டத்தட்ட 8 மடங்கு விலைக்குப் போயிற்று. 47,000 ரூபாய்க்கு அந்த மனை விலைபோன நேரம் 5800 ரூபாய்க்கு 15 ஏக்கர் வாங்கியவர் 123 ஏக்கர் வாங்கினார். அது 15ஐப் போல் 8 மடங்கு.

- ❀ செயல்களில் மனிதர்கள், ரூபாய், பொருள், விஸ்தீரணம், காலம், இடம்என ஆயிரம் விஷயங்களுண்டு. நமது நோக்கம், எண்ணம் பலனாக வெளிப்படும்பொழுது இந்த எல்லா அம்சங்களும், எல்லா வகைகளிலும் தொடர்புள்ளதைக் காட்டும். தவறாது காட்டும்.
- ❀ ஏனெனில் தொடர்பு எப்பொழுதும் உண்டு.
- ❀ தொடர்பில்லாத செயலில்லை.

  தொடர்பில்லாததில்லை.

  உலகமே ஒன்று, ஒருமையுடையது, ஐக்கியமானதுஎன்பதால் எப்படித் தொடர்பில்லாமலிருக்கும்?

பெரியவன் - அம்மா சொல்படி நடப்பதானால் பூமிக்குமேல் ஓர் அடியில் நடப்பது போலிருக்கும்;
தாயார் - நாம் சட்டத்திற்கு எதிராகப் போகாவிட்டால், சட்டம் நமக்குச் சாதகமாக இருக்கும்:

- ✡ கட்டுப்பாடில்லாதவன் கட்டுப்பாட்டை ஏற்பது பூமிக்குமேல் நடப்பது போலிருக்கும்.
- ✡ அது கட்டுப்பாட்டிற்கு மட்டுமன்று.
- ✡ வீட்டில் பெண்களும், ஆண்களும் தங்கள் வேலைகளை மாற்றிக் கொண்டாலும் அப்படியேயிருக்கும்.
- ✡ தச்சன் மேஜையில் உட்கார்ந்து எழுத்து வேலை செய்வதும், எழுதுபவன் தச்சன் வேலையைச் செய்வதும் சிரமமாகவேயிருக்கும்.
- ✡ அன்னை வாழ்வு,
  - ❀ புதியது என்பதால் சிரமம்.
  - ❀ உயர்ந்ததுஎன்பதாலும் சிரமம்.
  - ❀ நம் சுபாவம் விரும்பித் தேடாததுஎன்பதாலும் சிரமம்.
  - ❀ மாறியது, புதியது, உயர்ந்தது, வேண்டாதது ஆகியவை சிரமம்.



- ✡ சட்டம்:
  - ❀ பலரையும் கட்டுப்படுத்துவது சட்டம்.
  - ❀ அதனால் பலருடைய power சக்தியும் உடையது சட்டம்.
  - ❀ சட்டம் ஒரு மெஷின் போன்றது.
  - ❀ எதிராகப் போனால் சட்டம் எதிர்க்கும், அதன் முழுசக்தியுடன் எதிர்க்கும்.
  - ❀ எதிர்க்காவிட்டால் சாதகமாக இருக்கும்.
  - ❀ ஒரு கூட்டத்தைத் தொந்தரவு செய்தால் அவனைக் கூட்டம் அழிக்கும்.
  - ❀ கூட்டம் பேசாமலிருப்பது அவனுக்குச் சாதகமாக இருப்பதாகும்.
  - ❀ தனக்கு எதிராக இல்லாதவனைச் சட்டம் தனக்கு வேண்டியவன் என நினைத்து உதவும்.

    பேசாமலிருந்தால் கூட்டம் தன்னை ஆதரிப்பவனாக நம்மைக் கருதும்.
  - ❀ சட்டம், கூட்டம், சக்தி, சமநிலை ஆகியவற்றிற்குரிய பொது விதியிது.
  - ❀ எதிராகப் போனால் சட்டம் அசைந்து சக்தியை வெளியிடும்.

    அது எதிராக இருக்கும்.

    எதிர்க்காவிட்டால் சட்டம் தானே அசைந்து சக்தியை வெளியிடும்பொழுது தனக்கு எதிராக இல்லாத நம்மை ஆதரவாளராகக் கருதும்.
- ✡ நாம் என்பது அகந்தை.
- ✡ அகந்தை தனித்துப் பிரிந்து நிற்கிறது. பிரபஞ்சத்திற்கு எதிராக செயல்படுகிறது.
- ✡ அகந்தையும் பிரபஞ்சமும் (Universe) எதிரிகள்.

✡ உண்மையில் ஜீவாத்மாவும், பிரபஞ்சமும் ஒன்றே. பிரபஞ்சம் ஜீவாத்மா மூலம் வளர முயல்கிறது. அகந்தை ஜீவாத்மாவை பிரபஞ்சத்திற்கு எதிரியாக்கிவிட்டது.

✡ ஜீவாத்மாவைப் பிரபஞ்சம் வளர்க்க முயலும்பொழுது, அதன் மூலம் தான் பரமாத்மாவாக வளர முயலும் பொழுது அகந்தை பிரிவினையும், எதிர்ப்பையும் உண்டு பண்ணுகிறது.

✡ மனிதனை, காலரா, பெரியம்மையிலிருந்து காப்பாற்ற சர்க்கார் முயன்றால், கிராமத்து மனிதன் தடுப்பு ஊசி போட வருபவர்களை விரட்டியடிக்கிறான்.

✡ படிப்பால் உலகம் முன்னேற பள்ளிக்கூடம் திறந்தால் கிராமம் எதிர்க்கிறது.

✡ இறைவனின் அன்பை ஏந்தி வந்த ஏசுவை சிலுவையில் அறைந்தது.

✡ மனிதனின் பக்திக்குரலுக்காகக் காத்திருக்கும் இறைவனை மனிதன் புறக்கணித்துக் கேலி செய்கிறான்.

✡ பிரபஞ்சம் ஜீவாத்மாவை வளர்த்து, அதன் மூலம் தான் பரமாத்மாவாக முயலும்பொழுது அகந்தை குறுக்கிட்டுப் பிரபஞ்சத்தைத் தடுத்து,

  ❀ துன்பத்தை உற்பத்தி செய்கிறது.

  ❀ ஆனந்தத்தை வலியாக மாற்றுகிறது.

  ❀ அமரமான மனிதனுக்கு மரணத்தைப் பரிசாக அளித்து,

  ❀ துன்பம், வலி, மரணத்திற்கு என்ன பதில்என சவால் விடுகிறது.

சவாலுக்குப் பதில்:

  ❀ சட்டத்தை எதிர்க்காவிட்டால் சட்டம் சாதகமாகும்.

  ❀ பொய் சொல்லாவிட்டால் மெய் காக்கும்.

  ❀ லஞ்சம் கொடுக்கப் பிரியப்படாவிட்டால், லஞ்சம் நமக்கு வாராது.

  ❀ அல்பமாக நடக்கப் பிரியப்படாவிட்டால் பெருந்தன்மை பரிசளிக்கும்.



  ❀ போட்டிப் போடாவிட்டால், அனைவரும் ஒத்துழைப்பார்கள்.

  ❀ லேட்டா போகக் கூடாதுஎன முடிவு செய்தால் ஒரு நாளும் லேட்டா போகும் சந்தர்ப்பம் வாராது.

  ❀ கிண்டல் செய்யக்கூடாதுஎன்றால் உலகம் பாராட்டும்.

  ❀ வியாதியை வருந்தி அழைக்காவிட்டால் உடல் வெண்கலம் போலிருக்கும்.

  ❀ தீய சக்தியை அழைக்காவிட்டால் அன்னை நம் வாழ்வை நடத்துவார்.

  ❀ விக்காம் (Wickham) மீது உயிரை வைக்காவிட்டால் லிடியா அவனுடன் ஓடிப்போகமாட்டாள்.

பெரியவன் - ஏம்பா, அம்மா வீட்டில் சமையல் பண்ணுகிறவர்கள். அவர்களைப் போய் பிஸினஸ் விஷயமெல்லாம் கேட்டால் என்ன தெரியும்?

✡ அம்மாவுக்கு பிஸினஸ் விஷயம் தெரியாது.

✡ அப்பாவுக்குச் சமையல் விஷயம் தெரியாது.

✡ சமையலும், பிஸினஸும் அன்னைக்கு ஒன்றே.

✡ அன்னையைத் தெரிந்தால் அனைத்தின் essence சாரமும் தெரியும்.

✡ சமையல் மூலமாகப் பிஸினஸை அறிய சிறியதும், பெரியதும் ஒன்று என்று அறிய வேண்டும்.

✡ அன்னைக் கோட்பாடுகளை அறிந்தவருக்கு அனைத்து விஷயங்களின் சூட்சுமம் தெரியும்.

✡ ஷெட்டை எப்படிப் பெறுவது என்பது பிஸினஸ் விஷயம் என்றால் இன்று பிஸினஸ் லஞ்சமார்க்கத்தை நாடுகிறது. ஷெட்டைப் பெற அன்னை வழியுண்டு. அந்த வழி தெரிய பிஸினஸ் தெரிய வேண்டும் என்ற அவசியமில்லை. அந்த வழியில் போக உலகை விட்டு விலக

வேண்டும், எதிர்த்துப் போக வேண்டும். அதற்கு மரண தைரியம் வேண்டும்.

- ❀ தைரியம் அன்னைக்குரியது.
- ❀ பயம் இருளுக்குரியது.
- ❀ ஊரைக் கண்டு பயப்படுபவன் அன்னையைவிட்டு விலகுவான்.
- ❀ ஊரைவிட்டு விலக, தைரியம் வேண்டும்.
- ❀ ஊரை எதிர்க்க மரணத் தைரியம் வேண்டும்.
- ❀ தைரியலக்ஷ்மி உள்ள இடத்திற்கு மற்ற 7 லக்ஷ்மிகளும் வருவர்.
- ❀ லக்ஷ்மி பரம்பரை அறிந்தது.
- ❀ லக்ஷ்மியைச் செல்வம் என்பர்.
- ❀ ஸ்ரீ அரவிந்தர் கூறுவது லக்ஷ்மியில் அன்னை வெளிப்படுவது. அதை மகாலக்ஷ்மி என்கிறார்.
- ❀ அதன் தத்துவம் செல்வமன்று, சுமுகம்.
- ❀ செல்வம் சுமுகத்தால் வரும் பலவற்றுள் ஒன்று.
- ❀ பரம்பரை அறிந்தது லக்ஷ்மி என்றாலும், மஹாலக்ஷ்மி என்றாலும் (overmental godhead) காலத்திற்குரிய கடவுள். ஸ்ரீ அரவிந்தர் கூறும் மகாலக்ஷ்மி காலத்துள் காலத்தைக் கடந்த கடவுள்.

பார்ட்னர் - அதிர்ஷ்டம் என்றால் என்ன?

- ✡ அதிர்ஷ்டத்தைப் பூர்வஜென்மப் புண்ணியமாகக் கருதலாம்.
- ✡ Accomplishment in the subtle plane சூட்சுமச் சாதனையாக விளக்கலாம்.
- ✡ உலகில் நடப்பவை எதையும் எத்தனை வகையாகவோ, எதன் மூலமாக வேண்டுமானாலும் விளக்கலாம்.
- ✡ திருஷ்டியில்லாதது அதிர்ஷ்டம் என்றால் குருடுஎனப் பொருள்.



- ✡ திருஷ்டிஎன்றால் எதுவும் தெரியும், எங்கிருப்பதும் தெரியும், எக்காலத்திலிருப்பதும் தெரியும்.
- ✡ அனைத்தும் தெரிவதால் தவற வழியில்லை.
- ✡ அனைத்தும் தெரியும்போது, வேகம் அதிவேகமாகும்.
- ✡ வேகம் அதிகமானால் காலம் தன்னிலையை மாற்றி மூன்றாம் நிலைக்குப் போகும்.
- ✡ வேகம் அதிகமாகும்பொழுது லோகம் ஜடத்திலிருந்து சூட்சுமத்திற்கும், சூட்சுமத்திலிருந்து காரணலோகத்திற்கும் மாறும்.
- ✡ சப்தம் மௌனமாகி, மௌனத்தின்பின் மௌனமாகும் பாதை அது.
- ✡ பகுதி முழுமையாகி, பகுதியுள் உள்ள முழுமையாகக் காட்சியளிக்கும்.
- ✡ ரூபம் அரூபமாகி, பழைய ரூபம் கரைந்து புதிய ரூபம் புதிய நிலைக்குரியது எழும்.
- ✡ சிறியது பெரியதாகி, சிறியதனுள் உள்ள பெரியது தன்னை உணர்ந்து, மீண்டும் சிறியதாகவே செயல்படச் சம்மதிக்கும்.
- ✡ அதிர்ஷ்டம் அருளின் வாழ்வு ரூபம்.
- ✡ எல்லாம் தெரிவதால் எதுவும் தவறாதுஎன்பது அதிர்ஷ்டம்.
- ✡ எல்லாம் தெரிந்தபின், தான் தெரிந்ததை அறியாமல் திறமையாகச் செயல்படுவது அதிர்ஷ்டம். தான் தெரிந்ததை அறிந்து செயல்படுவது அருள். அருள் மனிதனில் அவன் சுபாவத்தால் செயல்படுகிறது. அருள் மனிதனில் அவன் சுபாவத்தை மீறி, அதை ஒதுக்கிச் செயல்படுவது பேரருள். சுபாவத்தை மீறியோ, ஒதுக்கியோ செயல்படுவதற்குப் பதிலாக, சுபாவம் தான் திருவுருமாற முயலும்படி செயல்படுவது சத்யாரோகணம் (Ascent to Supermind).
- ✡ அவ்வருள் எளிமையாகவோ, ஆடம்பரமாகவோ இருக்கும்என்பது பிரம்ம விவேகம்.
- ✡ அறியாமையைக் கடந்த பரிணாமம் அறிவிலிருந்து பேரறிவுக்கு வளர்வது பரிணாமம் தன் இன்றைய நிலையிலிருந்து அடுத்த கட்டம் செல்வதாகும்.

✡ அதிர்ஷ்டம் வாழ்வோடு முடிகிறது. அருள் அடுத்த கட்டம். பேரருள் நிலையாகச் செயல்படுவது யோகம் பரிணாமமாவது.

கணவர் - என்னால் குறைப்படாமலிருக்க முடியாது. அது முடியுமாஎனத் தெரியவில்லை. என்னால் முடியும் என்றால் நான் செய்துவிடுவேன்:

✡ முடியாது என்பது பிடிக்காது என்பதாகும்.

✡ பிடித்தால் முடியும். பிடிக்காததை முடியாது என்கிறோம்.

✡ பிடிப்பதால் மட்டும் முடியுமா?

✡ இன்று முடியாவிட்டால், ஒரு நாள் நிச்சயமாக முடியும்.

✡ 'குறைப்படாமலிருக்க முடியாது' என்றால் எனக்குக் குறைப்பட ஆசையாக இருக்கிறதுஎனப் பொருள். Taste of Ignorance.

✡ மனிதன் அறியாமையைத் தேர்ந்தெடுத்தால் அவன் சுதந்திரத்தை உரிமையுடன் செலுத்துகிறான்.

✡ மனிதனுடைய சுதந்திரத்தில் பிரம்மம் குறுக்கிடுவதில்லை.

✡ சுதந்திரம் முடிவானது - அதற்கு உரிமையுடையவன் மனிதன்.

✡ அவ்வுரிமையைக் கொண்டாடுவது மனிதனில் உள்ள பிரம்மம்.

✡ மறைந்து தன்னை மறந்த பிரம்மம் உரிமை கொண்டாடுகிறது.

✡ அது பிரம்மம்என்பதால் எவரும் தலையிட முடியாது.

✡ அறியாமை ருசிப்பது மாறி அறிவு ருசிப்பது விழிப்பு - ஞானமெனப்படும்.

✡ அந்த ஞானம் ஆனந்தம் தரும்.

✡ அந்த ஆனந்தம் சச்சிதானந்தத்தில்லாத ஆனந்தம்.

✡ அசைவற்ற ஆனந்தம் மேலேயுள்ளது.

✡ பூவுலகில் ஆனந்தம் அசைவது, ரூபத்தில் வெளிப்படுவது.



✡ ஆன்மாவே பூவுலகில் வளருவதால், ஆனந்தமும் வளர்கிறது.

✡ வளரும் ஆனந்தம் ரூபத்தைச் (Perfect form) சிறப்பாக்க முயல்கிறது.

✡ சிருஷ்டியின் இலட்சியம் ரூபத்தின் சிறப்பு.

✡ சச்சிதானந்தம் ரூபமற்ற ஆனந்தம்.

✡ சைத்தியப்புருஷனின் ஆனந்தம் சிறப்பான ரூபத்திற்கேற்ப வளரும் ஆன்மாவின் வளரும்ஆனந்தம். அது பிரம்மத்திற்குரிய ஆனந்தம் இல்லை. பிரம்மஜனனத்திற்குரிய ஆனந்தம். அதை நாடியே பிரம்மம் பூவுலகை சிருஷ்டித்தது.

தாயார் - நாமாகத் தவறு செய்யாவிட்டால் பிரச்சினை வாராது. வாய்ப்பு வரவேண்டுமானால், பிறர் தூண்டுதலாலும் தவறு செய்யக் கூடாது:

✡ தவறு என்பது கையிலுள்ள பொருளைத் தவற விடுவது போன்றது. அது தரையில் விழுந்து உடையும்.

✡ வாய்ப்பு பிரச்சினையைவிட அளவில் மிகப் பெரியது.

✡ பிரச்சினை உள்ளது கெடுவது.

✡ இல்லாதது வருவது வாய்ப்பு.

✡ நமக்கு வரும் வாய்ப்பு உலகில் இல்லாததில்லை, நம் உலகிலில்லாதது.

✡ அன்னை உலகிலில்லாத வாய்ப்பை அனைவருக்கும் தரும்பொழுது, பெற முடியாதவனுக்கு இருப்பதன் மூலம் தருவதால், அது உள்ளது போல் தெரிகிறது.

✡ மனிதன் தன் லோகத்தோடு ஒன்றியிருப்பதால், அதன் மூலமே அன்னை செயல்படுகிறார்.

✡ மனிதனால் அன்னையை அன்னைக்காக ஏற்க முடியும்என்றால், உலகிலில்லாத வாய்ப்பு ஆச்சரியமாக அன்பர் வாழ்வில் எழும்.

- ✡ உலகெங்கும் சில நாட்களில் பரவும் இயக்கங்களில் அன்னை சக்தி அதுபோலச் செயல்படுகிறது.
- ✡ நாம் செயலைவிட்டகன்று, சமூகத்தைவிட்டகன்று, மனச்சாட்சியைக் கடந்த நேரம் அன்னை சக்தியைத் தீண்டுகிறோம்.

அது இறைவன் வரும் தருணம்.

- ✡ தவறு செய்யக்கூடாது. ஏன் செய்தோம்என்பது கேள்வியில்லை. எவரால் செய்தோம்என்பதும் கேள்வியில்லை. தூண்டுதல் முக்கியமில்லை. தூண்டப்பட்டோம்என்றால் தவறினோம்.
- ✡ மின்சாரம் ஷாக்கடிக்கும்.
- ✡ தெரியாமல் தொட்டால் ஷாக்கடிக்காதா?
- ✡ நல்லதே குறைஎன்ற உலகில், தவற்றுக்கு ஏது இடம்?
- ✡ நல்லதையும், கெட்டதையும் கடக்க வேண்டியவர் ஏன் கெட்டுப் போனார்என விளக்குவதில் பயன் என்ன?
- ✡ எதை நினைக்கக் கூடாதோ அதைப் பேசலாமோ?
- ✡ அதைச் செய்ததற்கு வியாக்கியானம் அன்னை உலகிற்குத் தேவையில்லை.

தாயார் – முதலில் ஒரு குழந்தைக்கு ஒரு நல்ல பழக்கம் உற்பத்தியாக பெற்றோர் எவ்வளவு முயல்கிறார்கள்?

- ✡ மனிதன் தயாராகப் பல கட்டங்களுண்டு. ஒவ்வொரு கட்டத்திலும் அதற்கானது பெருமுயற்சி. முடிவாக அவனே அம்முயற்சியை எடுக்கிறான்.
  - ❀ முதல் முயற்சி தாயாருடையது (Physical habits).



  - ❀ அடுத்தது தாயாரும், குடும்பமும் எடுக்கும் முயற்சி (Social habits).
  - ❀ பள்ளிக்கூடம் அவனைக் கற்கவும், பழகவும், சாதிக்கவும் கற்றுக் கொடுக்கிறது (academic personality is prepared).
  - ❀ வேலைக்குப் போனால் ஆபீஸ் அவனை மனிதனாக்குகிறது (Official habits).
  - ❀ உயர்ந்த மனிதனாக அவனே பல risk ரிஸ்க் எடுத்து தன்னைத் தயார் செய்துகொள்கிறான்.
- ✡ அன்னையை ஏற்க மனிதன் முயல்வது இந்த 5 முயற்சிகளும் சேர்ந்ததைவிட அதிகமாக இருப்பது அவசியமன்றோ?
- ✡ இதன் தத்துவம் என்ன?
  - ❀ சிருஷ்டியில் மனம் வாழ்வாகும்பொழுதும், வாழ்வு ஜடமாகும் பொழுதும் – ஒரு நிலை அடுத்த நிலையாக மாறும்பொழுது – ஏராளமான புதுப்பழக்கங்கள் உற்பத்தியாகின்றன. மேலே கூறியது ஓர் உதாரணம். அன்னையை ஏற்பது அடுத்தகட்ட ஜீவியத்தை ஏற்பது. அதற்கு என்ன முயற்சி வேண்டும்எனத் தெரிந்து அதை எடுக்க விரும்புபவர் அன்னை எழுதியவற்றைப் படித்தால் பயனிருக்கும்.
  - ❀ நேரு நாட்டின் தலைவரானார், பெர்னார்ட்ஷா மேதையானார், சர்ச்சில் உலகைக் காப்பாற்றினார், சத்தியஜீவனாக ஒருவர் இதுபோன்ற பயிற்சியை முயற்சியால் பெற்றால் போதுமா? அதிகம் தேவையன்றோ?
  - ❀ தேனீ கூடு கட்டுவதையும், எறும்பு தான்யத்தை எடுத்துப் போவதையும் கண்டவர், அதுபோல் உழைக்க முன்வந்தால் போதாது என்பது சட்டம்.
  - ❀ இந்த வீட்டில் எவரும் எதுவும் செய்யாமல், கிறுக்குப் பேசுகிறார்கள்.

- ❀ சத்தியஜீவனில்லை என்றாலும் அதிர்ஷ்டத்திற்கும் அதே முயற்சி தேவை.
- ❀ சிருஷ்டியிலும், சமூகத்திலும், தனிமனித வாழ்விலும் உள்ளதைக் காண்பவர் அதை விட முயலப் பிரியப்படுவது அறிவுடைமை.
- ❀ கணவர் செய்தது எதுவுமில்லை.
- ❀ பெரியவரோ, சிறியவரோ என்ன செய்தார்கள்?
- ❀ ஏன் செய்யவேண்டும்எனப் பேசுவார்கள்.
- ❀ வாழ்வை உயர்த்துவது ஆயிரத்தில் ஒருவர்.
- ❀ வெறும் மனிதனுக்கு அவை வந்தபின் தவிப்பதை இக்குடும்பம் காட்டுகிறது.

தாயார் - உழைப்பாளி கஷ்டப்பட்டான்என்பது உலகிலில்லை:

- ✡ கஷ்டப்படுகிறவர்கள் தமக்கே பல காரணம் கூறுவார்கள். பிறரிடம் வேறு காரணம் கூறுவார்கள். அதில் ஒன்று, "நான் இரவு பகலாக உழைக்கிறேன் என் கஷ்டம் தீரவில்லை" என்பது.
  - ❀ முதலாவதாக அவர்கள் வேலையே செய்யாதவர்களாக இருப்பார்கள்.
  - ❀ அடுத்தாற்போல், கொஞ்ச வேலையில் ஈடுபடுவதாக நடிப்பார்கள்.
  - ❀ ஒரு சிறு வேலையைச் சிறப்பாகச் செய்துவிட்டு 85% பாக்கி வைத்தவர்களாக இருப்பார்கள்.
  - ❀ நாள் முழுவதும் கடினமாக வேலை செய்து, அந்த வேலையில் வேறு தவறான உரிமையை, தனக்கில்லாத உரிமையை எதிர்பார்ப்பார்கள்.
  - ❀ தன் நிலைக்குக் கீழிறங்கி அதிக வேலை செய்து, பலனை தன் நிலைக்கேற்ப எதிர்பார்ப்பார்கள்.



  - ❀ இவர்கள் எவருக்கும் அவர்கள் எதிர்பார்க்கும் பலன் வாராது. சிலருக்கு எதிரான பலனும் வரும்.
- ✡ உழைப்பு உயர்ந்தது, உடலின் பிரார்த்தனையாகும். தவறாது பலன் தரும். ஆன்மாவை உடலில் மிளிரச் செய்யும். பிரார்த்தனையைவிட உயர்ந்தது. பலனை அபரிமிதமாகத் தருவது.
  - ❀ உழைத்தவன் கஷ்டப்பட்டான்என்பது விளக்குப் போட்டபின் இருட்டாக இருக்கிறதுஎன்பது போன்றது.
  - ❀ அதையே அன்னைக்குச் செய்த பிரார்த்தனை பலிக்கவில்லை என்பது போன்றது எனவும் சொல்லலாம்.
  - ❀ உழைப்பு ஜடம் செயல்படுவது, மனம், வாழ்வைவிட அதிக சக்தி வாய்ந்தது ஜடமான உடல்.
  - ❀ அது பலன் தரவில்லைஎன்பது சொல்பவன் ஊரை ஏமாற்றுபவன் என்றாகும்.
  - ❀ ஐஸ் சூடாக இருக்கிறதுஎன்று கூறுவது அதைவிடச் சிறந்தது.
  - ❀ இக்குடும்பத்தில் உழைப்பாளிகள் இல்லை.
  - ❀ அன்பர் உழைக்க வேண்டியது மனத்தைக் கடந்த ஆத்மாவில்.
  - ❀ பொய்யின் பல வகைகளில் சிறந்தவற்றுள் இதுவும் ஒன்று.
  - ❀ 'என் ஜபம் சாயவில்லை' என்பவன் 'என் பொய்யான முயற்சிகள் பலிக்கவில்லை' என்கிறான். இதுவும் அது போன்றதே.
- ✡ உலக முழுவதும் 200 ஆண்டுகளாக சோஷலிஸ்ட்கள் சொல்லியது பொய்யா?
- ✡ அவர்கள் சொல்வது அரசியலில் சரி, சமூகத்திற்கு உண்மை.
- ✡ சமூகத்தின் உண்மை ஆன்மீகத்தில் உண்மையில்லையா?
- ✡ சமூகத்தில் 4 பேருடன் ஒத்துப்போவது ஆன்மீகத்தில் பொய்யாகும்.
- ✡ உழைப்பு எப்படிஎன்பது கேள்வி.
- ✡ சமூகத்தில் பல நிலைகள் உண்டு.

- ✡ உழைப்பாளியானாலும், எவரானாலும் அவர்கள் வருமானத்தில் முதல் செலவு, முக்கியச் செலவு சாப்பாடு; துணி, படிப்பிற்கில்லை. அது தங்களைச் சமூகத்தில் உயர்த்துவதற்கே. அதற்குச் செலவு செய்தால் சாப்பிட பணமிருக்காது.
- ✡ அவன் உடலால் மண்ணாங்கட்டியாக உழைப்பது அவனுக்குப் போதாது. திறமையாக உழைத்தால் போதும். அவனுக்கு 'தான்' என்பதே இருக்காது. சொந்தமாக எதுவும் புரியாது. தைரியமோ, நிதானமோ இருக்கவே இருக்காது.
  - ❀ உழைப்பாளி என்பவன் உண்பதற்குமட்டும் உரியவன். அதாவது சாப்பாட்டு இராமன்.
  - ❀ தான் சம்பாதிப்பதைச் சாப்பாட்டிற்கு மட்டும் செலவு செய்தால் அவன் கஷ்டப்படமாட்டான்.
  - ❀ அவன் பெரும்பாலான செலவு, தன் அந்தஸ்து உயர செலவிடப்படுகிறது.
  - ❀ அதைச் செய்ய அவனுக்கு உரிமையுண்டு. அதனால் கஷ்டப்படுகிறேன்என்பது உண்மையாகாது.
  - ❀ பூக்கடை குமாஸ்தா மாதம் ரூ.800/- பையன் படிக்கச் செலவிடுவது சரியா என்பதை எழுப்பவேண்டாம். இந்தச் செலவு செய்யாவிட்டால் வீட்டில் கஷ்டமில்லை.
  - ❀ பொதுவாக வேலைக்குத் தகுந்த உழைப்பைத் தர முடியாதவன் கஷ்டப்படுகிறான். அவனுக்கு உழைக்கும் தகுதியில்லை. அதைப் பெற கஷ்டப்படுகிறான். அவனது உழைப்புக்குரிய ஊதியம் வரத் தவறுவதில்லை.
  - ❀ Revolution of rising expectations எதிர்கால வளர்ச்சிக்குரிய புரட்சியது.
  - ❀ உழைப்புக்குத் தவறாது ஊதியம் உண்டு.
  - ❀ அடுத்த லெவலுக்குப் போக ஊதியமில்லை.



- ❀ அடுத்த லெவலுக்குப் போக அனைத்தையும் ரிஸ்க் செய்யவேண்டும். அதுவே அவன் செய்வது.
- ❀ விக்காம் பணக்காரியைக் கட்டிக் கொள்ள முயல்வதைப் போன்றது மனித யத்தனம்.

*தொடரும்.....*

❀❀❀

### ஸ்ரீ அரவிந்த சுடர்

**நம் பார்வையை நிர்ணயிப்பது நம் நோக்கம். பிரபஞ்சத்தின் ஆத்மா தன் பரிணாம வளர்ச்சியை, தனி மனிதனின் நோக்கமாக வெளிப்படுத்துகிறது.**

### ஸ்ரீ அரவிந்த சுடர்

ஒரு சிரமத்தைச் சந்தர்ப்பமாக மாற்ற கட்டுப்பாடு தேவை. அதே சிரமம் அகவுணர்விலிருந்தால் அதை மாற்ற, கட்டுப்பாடு போதாது; நம்பிக்கை வேண்டும்.

***நம்பிக்கை கட்டுப்பாட்டைவிட உயர்ந்தது.***

### ஸ்ரீ அரவிந்த சுடர்

**ஜீவியம் செயல்பட்டால் சக்தியுண்டாகிறது.**

# யோக வாழ்க்கை விளக்கம் V

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

**859) ஒருவர் பெரிதும் விரும்பிப் பெற முடியாததை நாம் கொடுப்பது யோகவாழ்வில் ஜடத்தின் உதாரகுணமாகும். தம் கட்டுப்பாடு இடம்கொடுக்காததை அளவுகடந்து ஒருவர் விரும்பினால் அதை மறுப்பது வாழ்வில் ஜடத்தின் ஆன்மீக உதாரகுணமாகும்.**

*கொடுப்பதும், மறுப்பதும் உதாரகுணமாகும்.*

- ✡ மனிதச் சுபாவத்திற்குப் பல குணங்களுண்டு.
- ✡ எந்தக் குணத்திற்கும் இரு முனைகளுள்ள வீச்சுண்டு.
- ✡ பெருந்தன்மைஎன்ற குணத்திற்கு எதிரானது கயமை.
- ✡ பெருந்தன்மைக்குப் பல கட்டங்களிருப்பதைப்போல் கயமைக்கும் பல கட்டங்களுண்டு.
- ✡ ஆபத்திற்கு எவரும் உதவுவார்.
- ✡ ஆபத்திலும் உதவாதவன் மனிதனில்லை.
- ✡ பிறருக்கு நஷ்டமேற்படுத்தி இலாபம் சம்பாதிப்பவன் மனிதனில் இராட்சசன்.
- ✡ தனக்கு இலாபமில்லாமல் பிறகு நஷ்டமேற்பட நடப்பவனை விவரிக்க எனக்கு வார்த்தையில்லை என்கிறார் கவி.
- ✡ நம்மால் முடியாததைப் பிறரைச் செய்யச் சொல்வது கயமைஎன்பது அன்னையின் விளக்கம்.
- ✡ ஒருவருடைய பெருமுயற்சியால் முடியாததை நாம் அவருக்குப் பெற்றுக் கொடுப்பது பெருந்தன்மை.



- ✡ நல்லது செய்வது நல்லது. கெட்டது செய்வதைத் தடுப்பது அதனினும் நல்லது.
- ✡ உதாரகுணமுள்ளவர்க்குக் கொடுக்காமலிருப்பது கஷ்டம்.
- ✡ மறுக்கவேண்டிய இடத்திலும் அவர்களால் மறுக்கமுடியாது.
- ✡ நம் உதவியால் ஒருவன் கெட்டுப்போவான்என அறியும்பொழுது அவ்வுதவியை மறுப்பது உதாரகுணமாகும்.
- ✡ சுயநலமிக்கு அது பிரச்சினையில்லை.
- ✡ உதவினால் உதவி திரும்பி நமக்கே தீமையாக வரும்என்றாலும் உதவ மறுப்பது நல்லவர்க்குச் சிரமம்.
- ✡ பணம் உபரியாகக் கொடுத்தால் மகன் அழிவான்எனத் தெரிந்தாலும் பல பெற்றோரால் தாராமலிருக்க முடியவில்லை.
- ✡ உதவி உபத்திரவம்என்பது சட்டம்.
- ✡ எவருக்கு உதவி செய்கிறோமோ அவருக்கே அது உபத்திரவம் என்பதும் உண்மை.
- ✡ ஆண்டவனுடைய உத்தரவுள்ள இடத்தில் செய்யும் உதவி திருவுள்ளம்.
- ✡ அதனால் நமக்கோ, பிறருக்கோ உபத்திரவம் வாராது.

❀❀❀

**860) தவறான வாழ்வு வியாதியை உற்பத்தி செய்கிறது. அது புது மருந்துகளைத் தோற்கடிக்கும் தீராத வியாதியாகவும் இருக்கும். உடல் அவ்வியாதியை அழிக்க எழுந்தால் வியாதி மறையும். பரம்பரையான சர்க்கார் சட்டம், மாற்றுச் சட்டத்தால் போகும். மனம் மாறினால் ஜடம் திருவுருமாற்றமடையும்என்ற பகவான் வாக்குக்கு இவை உதாரணங்கள்.**

*மனம் மாறினால் ஜடம் திருவுருமாறும்.*

✡ உலகில் வியாதியில்லை. ஆயிரத்தில் ஒன்று வியாதியாக இருக்கும் என்கிறார் அன்னை.

✡ வியாதிஎன்பது என்ன?

✡ உடலில் போதுமான சக்தியில்லாதது வியாதியாகும்.

✡ உள்ள சக்தியை விரயம் செய்தால் வியாதி வரும்.

✡ சக்தியை விரயம் செய்வது மனம், உடலன்று.

✡ எனவே வியாதி உடலுக்கன்று; மனத்திற்கு.

✡ மனம் அறிவுக்குக் கட்டுப்படும்.

✡ அறிவை மனம் ஏற்றால், அது மாறமுடியும்.

✡ மனம் மாறினால் ஜடமான உடல் திருவுருமாறும்.

✡ மனம் உடலுக்கு வியாதியை உற்பத்தி செய்தால் அதைக் குணப்படுத்த மனமே சிறந்த கருவி.

✡ போலண்டில் அந்த நாளில் ஒரு பல்ப் மாட்ட ஒருவர் பல்பைக் கையில் எடுத்துக்கொண்டு ஏணியில் ஏறினால் இருவர் ஏணியைப் பிடித்துக் கொள்வார்கள். பல்பை சாக்கட்டில் செருகித் திருப்பவேண்டும்என்று அவர்கட்குத் தெரியாததால், இருவர் ஏணியை சுழற்றுவர், பல்ப் சாக்கட்டில் மாட்டிக்கொள்ளும்.

✡ நாம் உடலுக்கு வந்த வியாதியை மனதால் குணப்படுத்தாமல், உடலால் குணப்படுத்துவது போலண்டில் பல்ப் போடுவதுபோலாகும்.

✡ 25 வயது இளைஞனுக்கு காலில் வலி. அவன் B.E. படித்தவன். டாக்டரிடம் காட்டினான். எலும்பு வளர்கிறதுஎன்றார். பலரிடமும் காட்டினான்.

எலும்பு வளர்கிறது - வெட்டி எடுக்கவேண்டும்

என்பதே பதிலாகக் கிடைத்தது.



யாராவது நல்ல பதில் சொல்லமாட்டார்களாஎன திருச்சியில் பேர்போன வயதான டாக்டரிடம் காட்டினான். அவர் மதுரையில் உள்ள பெரிய டாக்டரிடம் பேசினார்.

❀ எலும்பு வளர்கிறதுஎன்பது உண்மை.

❀ வெட்டி எடுக்கலாம். கொஞ்சநாள்கழித்து மீண்டும் வளரும்.

❀ மனத்தை மாற்றினால் ஆப்பரேஷன் தேவையில்லைஎன்றார்.

❀ அவன் திருமணம் செய்தால் வலி நிற்கும்என்றார்.

பெண் பார்க்கபோன அன்று அவன் வலி நின்றுவிட்டது.

உடலின் வாழ்வுக்கு மனம் சூட்சும மையம்.

*தொடரும்.....*

❀❀❀

## ஜீவிய மணி

**கலையும், கல்வியும் கடலென விரியும்.**

## ஸ்ரீ அரவிந்த சுடர்

தாழ்ந்த பண்புகளை விட்டொழித்தபின்னரே உயர்ந்த பண்புகள் பலிக்கும். உயர்ந்தவற்றை ஏற்றுக்கொண்ட பின்னரும், தாழ்ந்தவற்றின்மீதும் ஆசையும், பெருமையும் மனிதனை விடாது. ஜனநாயகம் வந்தபின்னும் போருக்கு மரியாதையிருக்கிறது. சன்னியாசத்தை மேற்கொண்டபின்னும் பணத்திற்குரிய மரியாதை போவதில்லை.

***விட்ட குறை தொட்ட குறை.***

# ஜீவியாஞ்சலி

## அன்னையே!

**இரு சொர்ணப்பறவைகள் ஒரு மரத்தின் கிளையில்**
**இணைபிரியா நண்பர்களாக அகந்தையும் ஆன்மாவும் -**
**ஒரு ஜீவனில்**
**முன்னவை இணைந்ததால் இனிப்பையும் கசப்பையும்**
**சேர்த்து உண்டது.**
**பின்னவை பிரிந்ததால் என்றும் சேர்ந்து வளர்ந்தது.**
**நான்தான் அகந்தையென்றால் நானே அகந்தையென்று**
**இணைந்ததால் துன்பத்தில் வீழ்ந்தது.**
**நான்தான் ஆத்மாவென்றால் நானே ஆத்மாவென்று**
**உணர்ந்ததால் விடுதலை அடைந்தது.**
**ஆன்மாவே நானென்ற ஆத்ம தரிசனம்**
**அன்பின்அழகாகவும் ஒளியின்தேவதையாகவும்**
**உன்னை மாற்றும்.**
**இயல்பாக வாழ்வின் முரண்கள்தோற்று வாழ்வுவிரியும்.**
**உன்னை அறிந்து உன்னை இழந்தால்**
**உள்ளொளி பெருகி வழிகாட்டிடும் இன்பம்**
**என்றென்றும் சொந்தமாகும் பூலோகம் சொர்க்கமாகும்.**

- ம -





# அன்னை ஒரு குழந்தை

வி.ரமேஷ் குமார்

டிசம்பர் 21, 2004.... கோயம்பேட்டில் கிருஸ்துமஸ் மற்றும் புதுவருட விடுமுறை கூட்டம். தரை தெரியாத கூட்டத்தில் மிதந்து பெங்களூர் KPNஐக் கண்டுபிடித்து ஏறி இருக்கை எண்-ஐப் பார்த்து அமர்ந்தேன்... அப்பாடா!....

இரவு 10.00 மணிப் பேருந்து அது. நிரம்பிவிட்டால் 15 நிமிடம் முன்பேகூட கிளம்பிவிடும். 10.15 ஆகியும் கிளம்பவில்லை. காரணம் என் பக்கத்து இருக்கை காலி. 'குருவி' கூவி அழைத்தும் ரூ.390/- டிக்கெட் ரூ.500/- விற்கும் நேரத்தில் 'சிங்கிள் சீட்' ஒன்றுகூட தேறவில்லை. டிரைவர் ஆச்சரியப்பட்டுக்கொண்டே வண்டியை எடுக்க... எனக்கு உரைக்க ஆரம்பித்தது....

நான் செல்வது ஓர் அகில இந்தியரீதியான டிரெய்னிங்கிற்காக. அதில் என்னைத்தவிர அனைவரும் இஞ்ஜீனியர்கள், விற்பன்னர்கள். என் கம்பெனி வேறு வழியில்லாமல் என்னை அனுப்புகிறது. குண்டுசட்டியில் குதிரை ஓட்டும் என்னை ரேசில் விட்டதுபோன்று ஒரு பயம். டிக்கெட் வந்தவுடன் தியானமையத்திற்கு ஓடினேன். "அன்னையே! நீங்கள்தான் என்னைக் கூட்டிச் சென்று வரவேண்டும்".

நிஜமாகவே இது அன்னை அமர்ந்து வரும் இருக்கையோ?... உடல் சிலிர்த்தது.

பஸ் வேகமெடுக்க.... குளிர ஆரம்பித்தது. ஒரு ஹெல்பர் கம்பளி தர, சீட் அருகில் வந்து எனக்கொன்றும், காலி இருக்கையில் யாரோ

இருப்பதுபோல அதற்கொன்றும் போட்டுச் செல்ல.... இனம் தெரியாத நெகிழ்ச்சியும், அழுகையும் வந்தது. ஐயோ! நான் அன்னைக்கு குழந்தையா? இல்லை... எத்தனைத் திட்டினாலும் க்ஷணநேரத்தில் அத்தனையும் மறந்து திரும்ப ஓடிவந்து ஒட்டிக்கொள்ளும் குழந்தைபோல அன்னை ஒரு குழந்தையா?

இரண்டு வருடங்களாக நான் போடுகிற ஆட்டத்தையும், அன்னைக்குப் பிடிக்காத செயல்களையும் மன்னித்து, கூப்பிட்ட குரலுக்கு உடனே ஏறி சீட்டில் அமர்ந்துவிட்டவரை என்னவென்று அழைப்பது?....

என் நினைவுகள் அன்னையைப் பரபரப்பாகத் தேடிய அந்த நாட்களுக்குச் சென்றது.

சரியாக இரண்டு வருடங்களுக்குமுன்பு.....

என்னால் எதையும் சாதிக்கமுடியும்என்ற அகந்தையில் ஒரு பிராஜக்ட்டில் அகலக்கால் வைத்தபிறகு, வழக்கமாக அனைவரும் சொல்லும் சமாதானங்களைச் சொல்லி பேங்கில் ஆரம்பித்து படிப்படியாக 'முன்னேறி' உருட்டல், புரட்டல்என்று வந்து கந்துவட்டியில் நின்றேன்.

நின்றேன் என்றால்... நிறுத்தப்பட்டேன்.... வேறு யாரும் தரத் தயாராக இல்லாததால்.

பிறகென்ன? என் சொற்ப முதலீடுகளைப் பிடுங்கி வரவு வைத்துக்கொள்ள அத்தனை பேரும் கார் மற்றும் பைக்கில் சுற்ற தலைமறைவானேன்.

ஒன்றிரண்டு நலம் விரும்பி நண்பர்கள் தயவால் நாட்களைக் கடத்திக்கொண்டு இருந்தபோதுதான் ஒரு நண்பர் சொன்னார், “உன் ஜாதகத்தில் குரு சரியில்லை. அதனால் நீ.......... சென்று வா. எல்லாம் சரியாகிவிடும்''.

மௌனமாக இருந்தேன். கடந்த சில மாதங்களாக “எத்தை தின்றால் பித்தம் தெளியும்'' என்ற நிலையில், யார் எது சொன்னாலும் செய்து



அறை முழுக்க பிரசாதங்கள், எந்திரங்கள், படங்கள் நிரம்பி இருந்தது. அதோடு அவ்வளவு தூரம் சென்றுவர பணமும் இல்லை.

''சரி, வேண்டாம். குறைந்தது குரு ஸ்தானத்தில் இருந்தவரது ஸ்தலத்திற்காவது சென்று வா. கிட்ட இருப்பது பாண்டிதான். நூறு, நூற்றைம்பது ஆகும். நான் வேண்டுமானால் தருகிறேன்'' என்றான் குமார்.

வேண்டுதல் என்பதைவிட எனக்கு ஒரு மாற்றம் தேவைப்பட்டது. 'சரி'என்று கிளம்பி விசாரித்து ஆசிரமம் வந்து சேர்ந்தேன்.

என்ன இது?.... அமங்கலமான சமாதி.... மந்திரமில்லை... பூஜையில்லை. சிலைக்கு அபிஷேகம் செய்து, உடலை வருத்தி, கெஞ்சி கேட்டே பழக்கப்பட்ட எனக்கு... இங்கு எதனிடம் எதை வேண்டுவதுஎன்று தெரியவில்லை. பொழுதுபோவதற்கு உட்கார்ந்து இருந்தேன். சூழலில் இருந்த அமைதி என்னுள் இறங்குவதுபோல, என் டென்ஷன் வடிவதுபோல இருந்தது. பிரமையோஎன்று நினைத்தேன். காரணம் புரியாமல் திரும்ப நண்பன் வீடு வந்து சேர்ந்தேன்.

எனக்காகவே காத்திருந்ததுபோல நண்பர் குடும்பம் 'கை கொடுங்கள்'என்றனர். புரியாமல் விழித்தேன். மிகவும் பிரச்சினை செய்துகொண்டிருந்த பைனான்சியர் ஒருவருக்கு திருநெல்வேலி அருகில் ஆக்சிடண்ட். இன்னும் மூன்று மாதத்திற்கு சென்னை வரமாட்டாராம் என்றனர். குமார், “டேய் ஒவ்வொருவருக்கு ஒரு சாமி செட்டாகும். உனக்கு பாண்டி செட்டாவதுபோல இருக்கு. கெட்டியாகப் பிடிச்சிக்கோ''என்றான்.

வெகுநாட்களுக்குப் பிறகு கனவுகள், பயங்கள் இல்லாமல் தூங்கினேன்.

மறுநாள்...... காலை

டீக்கடை போஸ்டரில் தலைப்புச்செய்தி திடுக்கிட வைத்தது.

‘‘பிரபலத் திரைப்படத் தயாரிப்பாளர் தற்கொலை. கந்துவட்டி காரணமா? பிரபல பைனான்சியர் தலைமறைவு’’. இவரும் என்னைத் தேடிக் கொண்டிருந்தவர்தான். ஒன்றும் புரியாமல் யோசித்தேன்… ஒரு வார்த்தைகூட வேண்டாமல், வேண்டாவெறுப்பாகப் பொழுதைகழிப்பதற்கு உட்கார்ந்து இருந்ததற்கே இந்த பலனென்றால்....

அடுத்த பஸ் பிடித்து ஓடி சமாதியில் தலைகவிழ்ந்து அழுதேன். பாரம் அத்தனையும் இறங்கியதுபோல் இருந்தது. வரும்போது ஒரு படமும் வாங்கிவந்தேன். ஷெல்பில் இருக்கும் இருபது படங்களுக்கு நடுவில் அன்னையும், பகவானும் வந்து அமர்ந்துகொண்டனர். மனம் பரபரப்பாக இருந்தது. அடுத்து எப்படி ‘ரூட்’ போடுவார்கள்என்ற எதிர்பார்ப்பில் நான்கு நாட்கள் சென்றது.

மீண்டும் தலைப்புச்செய்தி: “கந்துவட்டித் தடைச் சட்டம் அமல். பைனான்சியர்கள் ஓட்டம்”. டீ குடிக்க முடியாத அளவிற்கு சந்தோஷத்தில் புறை ஏறியது. நண்பனிடம், “இது போதும். கொஞ்சம் மூச்சுவிட நேரம் கொடுத்தால் போதும். சமாளித்து, சரி செய்துவிடுவேன்’’என்றேன். நண்பன் எச்சரித்தான், ‘‘திரும்ப ‘நான்’ வந்துடுச்சி பாத்தியா. விவசாயியும், மீன்காரனும் ஒருத்தனுக்கு வேண்டினா, அறுவடைக்கு போற எல்லாருக்கும் கிடைக்கும். அந்த மாதிரி அம்மா அள்ளிகொடுத்தது உனக்குமட்டுமன்று. எவ்வளவோ குடும்பத்திற்கு நிம்மதி ஏற்படுத்தி இருக்காங்க. நான் பார்த்துக்கறேன்என்று ஆட்டம்போடாமல் மதர் பின்னாடியே போ”என்றான்.

எனக்கு திருப்தி இல்லை. இப்படியெல்லாம் பிரச்சினை தீர்வது. எனக்குத் தெரிந்தவகையில் தீர்ந்தால்தான் அது தீர்வு. பணம் (கடன்) கிடைக்கவேண்டும். அத்தனை பேர் முகத்திலும் விட்டெறிந்து நாக்கை பிடிங்கிகொள்ளுமளவிற்கு “நான்கு” கேள்வி கேட்டுவிட்டு வரவேண்டும். அதுவல்லவா தீர்வு?....

சில வாரங்கள் அமைதியாகக் கழிந்தது. கழுத்திற்கு வந்த கத்தி விலகியது தெரிந்தது. ஆனால், வேறு ஒரு முன்னேற்றமும் இல்லை.



வேறு வழியில்லாமல் வேலை தேடத் தொடங்கினேன். என்னை, என் படிப்பை, என் அனுபவத்தினை நம்பி இருந்தேன். ரூ.2500/-க்கு மேல் தர யாரும் தயாராக இல்லை. என்னிடம் வேலை பார்த்த சாதாரண தொழிலாளிக்கு ரூ.2500/- முதல் மேனேஜருக்கு ரூ.7000/- வரை கொடுத்தவனாதலால் சுயபச்சாதாபத்தில் ஆழ்ந்து அரற்றினேன்.

திரும்ப ஓடினேன் பாண்டிக்கு. எத்தனை முறை உதவினால் என்ன? மீண்டும் “உன்னை”த்தானே நம்புகிறாய்என்று கேட்பதுபோல இருந்தது அன்னையின் பார்வை...

இப்போதெல்லாம் பாண்டி சென்றுவந்தால் 24 மணி நேரத்தில் ரிசல்ட்என்று தெரிந்துவிட்டதால் எதிர்பார்ப்புடன் காத்திருந்தேன்.

என் வெகுநாள் நண்பன் முரளி, கெமிக்கல் பிசினஸ் செய்பவன் வந்தான். “நான் தனியாக ஆபீஸ் போடப்போகிறேன். பார்த்துகொள்ள முடியுமா? என்னால் ரூ.3000/- மேல் தரமுடியாது. ஆனால் உனக்கு தற்போது இது மிகவும் உதவியாக இருக்கும்” என்றான்.

எனக்கு மிகவும் வெட்கமாகவும், எரிச்சலாகவும் இருந்தது. பெரிதாக எதிர்பார்த்தேன்.... அன்னை கவிழ்த்துவிட்டார்களே.... வேண்டாவெறுப்பாக சரி என்றேன். காரணம் வேறு வழி தெரியவில்லை. இரண்டு மாதங்கள் அமைதியாகச் சென்றதில் அன்னை எழுதியவைகளைப் படிக்க முடிந்தது. அருள் வரும் விதம் புரிந்தவுடன் வெறுப்பை விலக்கி வேலையை ஈடுபாட்டுடன் செய்ய ஆரம்பித்தேன். சாப்பாட்டிற்கு கை ஏந்த தேவையில்லாமல் இருந்ததேதவிர வேறு முன்னேற்றம் இல்லை.

அப்போதுதான் அந்த இடிச் செய்தி வந்தது.... நான் பணம் தரவேண்டியவர்கள் அனைவரும் ஒன்றுசேர்ந்து ஒரு பெரிய ரௌடியிடம் முறையிட்டதாகவும், அவன் ஆட்கள் என் வீட்டிற்கு வந்து, என் தொடர்புகள் பற்றி அறிய கதவை உடைத்து இருந்த ஒன்றிரண்டு பர்னிசர்களையும் எடுத்துசென்றுவிட்டதாகவும் நண்பன் ஓடிவந்து சொன்னான்.

வீடு சென்று பார்த்தேன். தேறும் அளவிற்கு எதுவும் இல்லை. அங்கு இருந்த அத்தனைப் படங்களையும் வெறுப்புடன் பார்த்தேன். அள்ளி குப்பையில் போட்டு, வீட்டை காலி செய்து ஓனரிடம் ஒப்படைத்துவிட்டு பீச்சில் உட்கார்ந்தேன். நண்பன் ஆறுதலாகப் பேச ஆரம்பித்தான். ‘‘மனதைத் தளரவிடாதே. நடப்பதுதான் நடக்கும்...’’ சட்டென்று இடைமறித்தேன். “நடப்பதுதான் நடக்கும்என்றால் எதற்கு இத்தனை தெய்வங்கள், வேண்டுதல்கள்? இன்றுடன் எல்லாவற்றிற்கும் தலைமுழுகுகிறேன். சம்பிரதாயம், சாங்கியம், முறை எதையும் பின்பற்றப் போவதில்லை. கண்கூடாக இரண்டு, மூன்று முறை நல்லது நடந்ததால் அன்னைமட்டும் பாக்கெட்டில் இருக்கட்டும்” என்று எழுந்தேன்.

நண்பன் திட்ட ஆரம்பித்தான். ‘‘உன் கெட்ட நேரம்தான் இப்படியெல்லாம் புத்தி போகிறது. இதுவரை தப்பியதே நீ செய்த பூஜைகளால்தான்”. ஏதேதோ சொன்னான். கேட்கும் மனநிலையில் நான் இல்லை.

ஆனால் அதன் தாக்கம் மறுநாள், தலைப்புச்செய்தியாக: “பிரபல ரவுடி... சுடப்பட்டான்”. கைகொடுத்தான் நண்பன். “டேய், ஒன்றுமட்டும் புரிகிறது. உன் மதர் ஒருவருக்குமட்டும் கொடுப்பதில்லைபோலும். எப்போதும் பல பேருக்கு பயனுள்ளதாகவே நடக்கிறதே”என்றான்.

எனக்கு வேறொன்றும் புரிந்தது. எனக்காக அன்னை செயல்படுவதற்குத் தடை ஏற்படுத்துவது நான்மட்டுமே. பல தெய்வங்களுக்கு நடுவில் ஒருவராகச் செயல்பட்டபோது மென்மையாக மகாலட்சுமியாக மட்டுமே செயல்படமுடிந்தது. அன்னைமட்டுமே அடைக்கலம்என்றபோது புயலென காளி அம்சம் வெளிப்பட... பக்தனைக் காக்க எதுவேண்டுமானாலும் செய்யும் அன்பு.... ஐயோ! இதற்கெல்லாம் நான் தகுதியானவன்தானா?.... சாப்பிடத் தோன்றாமல், பேசத் தோன்றாமல், அந்த நெகிழ்ச்சியிலேயே நீடிக்கவேண்டி அசையக்கூட இல்லை.

ஒருநாள்.....



முரளி, என் தற்போதைய முதலாளி, அழைத்தான். ‘‘உன் திறமையெல்லாம் இங்கு வேஸ்ட் செய்யவேண்டாம். என் நண்பர், கோவையைச் சேர்ந்தவர், சென்னையில் கிளை திறக்க உள்ளார். கட்டிட ரிப்பேர்களுக்கான லேட்டஸ்ட் கெமிக்கல்ஸ் மற்றும் டெக்னாலஜிக்கான லைசென்ஸ் ஸ்விட்சர்லாந்து கம்பெனியிலிருந்து வாங்கி இருக்கிறார். புதிய ஃபீல்ட்தான். ஆனால், நல்ல எதிர்காலம் உள்ளது. நான் உன்னை சொல்லி இருக்கிறேன். போ”என்றான்.

மேலே பார்த்தேன்... வழக்கம்போல அன்னையின் சிரிப்பு.... “இப்போது தெரிந்ததா, நான் ஏன் கெமிக்கல்ஸில் விட்டேன்என்று”என்பதுபோல இருந்தது. வாழ்க்கையில் முதன்முறையாக யோசிக்கும்முன்பே அன்னை ஞாபகம் அன்றுதான் வந்தது. சமர்ப்பணம் ஆவது தெரிந்தது. “சரி”என்றேன்.

சமர்ப்பணத்தின் சக்தி என்ன என்று இந்த ஒரு வருடத்தில் நான் அடைந்த உயரம் புரியவைத்துள்ளது. M.E. அல்லது M.Tech. மட்டுமே ஈடுபடக்கூடிய வேலையில், பெரிய அயல்நாட்டு கன்சல்ட்டண்ட்கள் நடுவில், இந்தியாவின் கௌரவ பிராஜக்டுகளான செயற்கைகோள் ஏவுதல், அணுமின் நிலையங்கள் பாதுகாப்பு ஆகியவற்றில் பங்குகொள்ள வைத்ததை எந்த வார்த்தை கொண்டு வர்ணிக்கமுடியும். குறைந்தபட்சத் தேவையான டிப்ளமோகூட என்னிடம் கிடையாது. பாம்ம்.... பஸ்ஸின் ஹார்ன். என் நினைவுகளை கலைத்தது. பெங்களூர் கலாசிபாளையம்.

அன்னை இன்னும் அருகில் இருப்பதுபோன்ற உணர்வு, தைரியம் தந்தது. ஆட்டோ பிடித்து பயிற்சிக்கான இடம் வந்துசேர்ந்தேன். மூன்று நாட்கள் பயிற்சிகள். அகில இந்தியாவிலிருந்தும் வந்திருந்த இன்ஜீனியர்கள் நடுவில், non-இன்ஜீனியர் நான்மட்டுமே என்ற தகவல் ஜோக்காக சொல்லப்பட... எப்படி சாத்தியம்என்று அனைவரும் புருவம் உயர்த்த.... ஒரு sessionல்கூட நான் தடுமாறாமல் இருக்க... என் மைனஸ்ஸே ப்ளஸ்ஆகி..... அதன்பிறகு கிடைத்த மரியாதை அன்னை அழைத்துவந்ததால்மட்டுமே என்று புரிந்தது. ஆம், சமர்ப்பணத்தால் அன்னை ஜீவியமல்லவா செயல்பட்டது.

அதுமட்டுமன்று, வாழ்வில் உள்ள எவரும், எந்தத் துறையில் இருந்தாலும், அன்பருக்கு நிகரில்லையென்பது சத்தியவாக்கன்றோ!

❀❀❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

இலட்சியம், தீவிரம் முழுமையானதானால், எந்த முறையும் தேவையில்லை.

***தீவிர இலட்சியத்திற்கு முறையில்லை.***

## ஸ்ரீ அரவிந்த சுடர்

எண்ணங்கள் அற்றுப்போவது மௌனத்தையடைய அவசியம். பேசவேண்டும்என்ற ஆசை அழிவதும் மௌனத்தை நிரந்தரமாகப் பெற அவசியம்.

***பேச்சு அழிவது போதாது; பேசும் ஆசை அழிய வேண்டும்.***

## ஸ்ரீ அரவிந்த சுடர்

உலகத்தில் துன்பம் இல்லையென்ற கருத்தை மனம் நிரந்தரமாக ஏற்றுக்கொள்ளுதல் நன்று. அது மனத்திற்கு ஆன்மிகத்தை அளித்துப் பேரின்பத்தை நிலைநாட்டும்.

***இன்ப, துன்பங்களைக் கடந்த மனம் ஆன்மிகப் பேரின்பத்தை நிலையாகப் பெறும்.***





## P.57 The Alpha and the Omega in one sound.

**ஆதியும் அந்தமும் அடங்கிய அக்ஷரம்.**

- ✡ **புருஷனும், பிரகிருதியும் ஒன்றே.**
- ✡ **புதிரின் இரு முனைகள்.**
- ✡ **பரந்த பிரம்மத்தின் பரவெளிச் சின்னம்.**
- ✡ **சலனமற்ற மௌனத்தின் வெண்மையான பிறந்த மேனி.**
- ✡ **பொன்மயமான சூரியனின் பொறுக்கமுடியாத பிரகாசம்.**
- ✡ **ஊனக்கண் தாங்காத கதிரின் திரை.**
- ✡ **சுதந்திரமான ஆன்மாவின் வலிமையின் முழுமை.**
- ✡ **இறைநினைவின் சிந்தனைத் தழல்.**
- ✡ **பூரிப்பும், பிரகாசமும் அடங்கிய ஆழ்ந்த அமைதி.**
- ✡ **புண்பட்ட நெஞ்சம் தேடும் புகலிடம்.**
- ✡ **சோகத்தை நாடி விலகிய எண்ணம்.**
- ✡ **வேதனைக் குரலெழுப்பும் சக்தியினின்று விலகியவன்.**
- ✡ **அகலாத ஆனந்தத்தின் வாழ்வு.**
- ✡ **தூய்மையான ஞானமும் சக்தியும்.**
- ✡ **அனந்தனின் கட்டளைமீது அமரும் அமைதி.**
- ✡ **அவனது சட்டம்போல் அவனே முடிவு.**
- ✡ **இலக்குமில்லை, இலட்சியமுமில்லை.**
- ✡ **காலத்தின் கறைபடாத தூய்மை.**
- ✡ **ஆதாயமும் காணிக்கையும் ஏற்புடையதன்று.**
- ✡ **எதிர்ப்பையும் மடமையும் எதிர்கொண்ட நிலை.**
- ✡ **பாவத்தையும் புண்ணியத்தையும் பாராட்டாத பாங்கு.**

- **துதியையும் பாராட்டையும் கேளாத செவி.**
- **குறையின் ஆட்சிக்குக் கூட்டுச்சேராத கூட்டம்.**
- **சத்தியத்தின் மௌனக் காவலர்கள்.**
- **ஆழ்ந்த சரணாகதி அதிக வலிமை தரும் சூழல்.**
- **இரண்டறக்கலந்து பெற்ற ஞானம்.**
- **நித்திரைபோன்ற அசைவற்ற செயல்.**
- **வானவெளியில் வதியும் கலகத்தைக் கடந்த சாந்தம்.**
- **மரணத்தின் செயலைக் காணும் மரணமிலா நிலை.**
- **யுகங்கள் கடக்கும் அசைவற்ற அஸ்திவாரம்.**
- **விதியின் விளையாட்டு விளக்கும் விபரீதம் தொடாத பற்றற்ற நிலை.**
- **ஆசையோ ஆபத்தோ அசைக்காத ஆழம்.**

❀❀❀

### ஸ்ரீ அரவிந்த சுடர்

வாழ்வுஎன்பது தடையின்றி, தானே இயங்கும் அமைப்பு. க்ஷணம் தவறாமல் இயங்கவல்லது. அதன்மீது ஒரு திரை படிந்துள்ளதைப்போல் நம்மில் அது அமைந்துள்ளது. பிரார்த்தனை, சமர்ப்பணம், அழைப்பு ஆகியவை திரையை விலக்கிச் செயல்படும் திறனுடையவை. அங்கு (**life response**) வாழ்வின் எதிரொலி கேட்கிறது. அதாவது செயல்கள் தடையின்றி நடக்கின்றன. அதே நிலையில் நாமிருந்தால் தடையற்ற முன்னேற்றம் தொடர்ந்திருக்கும்.

***எதிரொலியில் நின்று நிலைத்தால் முடிவற்ற முன்னேற்றமுண்டு.***



# What Do We Mean by Taking to the Spirit?

A governor is governed by protocol. He is not a free individual. A Zen Master said to his disciple, “When I eat, I eat; when I write, I write; whereas when you eat, you think about writing; when you write, you think about food.” **To live fully in the present without the mind wandering to the past or future is the discipline of Zen**. We live in time, i.e. the past holds us in its grip; and the future peeps into the mind. One who lives in the Timeless dimension lives in the ever present. He is a Rishi in tapas.

There is a further dimension of time, first mentioned by Sri Aurobindo. It is the Timeless functioning in Time. Let us call it the third dimension for our purposes. He calls it Simultaneous Time. This is Supramental Time. To put these philosophical ideas in the common man’s phrase, one needs to resort to analogies. We live a domestic life which is in Time. The Rishi lives in the Timeless Eternity during his trance. **If the Rishi chooses to live a domestic life according to his exalted standards of Timeless stillness, he enters the Simultaneous Time, the Supramental Time**. Life at home lived according to the pristine purity of yogic trance raises human life to that of divine life. Then man rises to the level of the Supramental Being.

If that is the goal of a long journey, the first step into that life at its lowest level is to live in Spirit. How do we know whether we are here or there? All religious worship we have followed up until now will be shed like the snake’s skin. It will be forgotten. **The days of religious worship are over. The Future is for Spirituality**. One will be incapable of uttering any falsehood. Life at government offices, bazaar, at home and everywhere steeped in falsehood will bow its head and will NOT demand

of you compliance. Instead, people will put up an honest behaviour towards you.

The work done by such a one will be completed in a fraction of time. Whatever we have so far sought after will gravitate towards us, often unsolicited. This is the semblance of the Spirit moving Matter. All problems in life will vanish. Opportunities will rush from all sides. **A Joy which no success can give, a Peace unavailable even in death will saturate us.**

— ***Courtesy:*** New Indian Express

❀❀❀

### ஸ்ரீ அரவிந்த சுடர்

அகந்தையின்றி பார்த்தால் சத்தியம் சக்தியாகத் தெரியும்.

***சக்தியான சத்தியம்.***

### ஸ்ரீ அரவிந்த சுடர்

சுயநலம் நிறைந்தவனுக்கு, தான் தன்னலமற்ற குணம் நிறைந்தவன்என்பது தெளிவாக ஏற்றுக்கொள்ளும் உணர்வாகும்.

***சொந்த நலனே சுயநலமிக்குப் பரநலம்.***

Printed by Mrs. Anuradha Sriram, Integra, No.51, II Cross, Jawahar Nagar, Nellithope Post, Pondicherry-5 and Published by Mr. P.V. Balakrishnan, 12, First Cross, Venkata Nagar, Pondicherry-11 on behalf of The Mother's Service Society, Pondicherry-11.
Editor: Karmayogi

# நம் வாழ்வில் அன்னையின் வருகை

அன்னையை அறிந்தபின் சுண்டியிருந்த முகம் மலரும். எண்ணெய் வழிந்த முகம் பளபளக்கும். துவண்டிருந்த உடல் நிமிர்ந்து நிற்கும்.

✡ *கணவரை இழந்து டாக்டர் தொழில் செய்தவர் மனம் ஒடிந்திருந்தார். நண்பர் ஒருவர் அன்னை படம் கொடுத்து, அன்னையை ஏற்கச் சொன்னார். படத்தைப் பார்த்ததும் மனத்தில் தெம்பு வந்தது. எழுந்து நின்றதுபோன்றிருந்தது. குதூகலம் பிறந்தது. பிறந்தது வளர்ந்தது. வளர்ந்துகொண்டே இருக்கிறது. இவரைச் சந்திப்பவர் அனைவரும் அன்னையைப் பார்த்ததுபோல் மகிழ்ந்து, நெகிழ்ந்து போகின்றனர்.*

✡ *அன்னையை ஏற்றுக்கொண்டபின் பக்தரின் நண்பர்கள் "ஆளே மாறிவிட்டீர்களே, புதிய மனிதராகக் காணப்படுகிறீர்களே. நம்ப முடியவில்லை. பேச்சு, தெம்பாக மாறிவிட்டதே. என்ன நடந்தது? ஒன்றும் புரியவில்லையே"எனக் கேட்டனர்.*

✡ *"என் தோல் வறண்டுபோகும். காலில் வீக்கம் வரும். அதனால் அடிக்கடி ஜுரம் வரும். வீக்கம் வாட மருந்து சாப்பிடுவேன். அன்னையை அறிந்தபின் அவை மறந்துபோய்விட்டன. தோலில் வறட்சியில்லை. காலில் வீக்கமில்லை. ஜுரம் வருவதில்லை. நான் இவற்றிற்காகப் பிரார்த்திக்கவில்லை. ஏனெனில் அவை நான் மறந்தவை".*

மேற்சொன்னவை கண்ணுக்குத் தெரியும் மாற்றங்கள். ஆன்மாவில் ஏற்படும் மாற்றங்கள் பெரியவை. அவை கண்ணுக்குத் தெரியா. மனத்திற்கும் புலப்படா.

❀❀❀

# தர்மபுரி

தர்மபுரியிலிருந்து ஓர் அன்பர் எளியநடையில் ஒரு கடிதம் எழுதியிருந்தார். அக்கடிதத்தின் சில கருத்துகள்:

✡ **அவர் அன்னையைப் பற்றிய தமிழ் நூல் ஒன்றைப் படித்தபொழுது ஆர்வம் மேலிட்டு அந்நூலைப் பிரதி எடுக்க முயன்றார்.**

✡ **பிரதியை எழுதும்பொழுது மனம் அமைதி அடைந்தது.**

✡ **மனத்துள் 'சோ'என மழை பெய்வதைப்போன்ற உணர்வு ஏற்பட்டது.***

✡ **'மழை' நின்றபின் அமைதி ஆழத்துள் போய் மறைந்து பேரமைதியாயிற்று.**

✡ **அதன்பின் எவரைக் கண்டாலும் அன்னையின் திருவடிகள் அவர் மார்பில் தென்பட்டன.**

✡ **பொதுவான சந்தோஷம் உள்ளிருந்து அதிகமாக எழுந்தது.**

✡ **எவரைக் கண்டால் எரிச்சல் வருமோ, அவரை இப்பொழுது பார்த்தால் உள்ளம் பூரித்தது.**

*** ஆத்மாவுக்கு அருள் மழை பெய்தால் இவ்வுணர்வு ஏற்படும்.**

❀❀❀